உ

சிவமயம்

2005 October

# அருள் ஒளி




"மூவர்க்கும் முதற்பொருளாய் முத்தொழிற்கும் வித்தாகி
நாவிற்கும் மனத்துக்கும் நாடரிய பேரறிவாய்த்
தேவர்க்கும் முனிவர்க்கும் சித்தர்க்கும் நாகர்க்கும்
யாவர்க்கும் தாயாகும் எழிற்பரையை வணங்குவாம்."

## துர்க்காதேவி மகோற்சவ சிறப்பு மலர்

ஆவணி மாத இதழ்

**ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்**
**தெல்லிப்பழை.**
**இலங்கை-2005**

மலர் 38

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


உ
சிவமயம்

# செல்வச்சந்நிதி முருகன் ஆலயம்



அன்னதானக் கந்தனை அருள் வேண்டிப் பிரார்த்திப்போம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அருள் ஒளி

(மாதாந்த சஞ்சிகை)

ஆசிரியர்:
செஞ்சொற்செல்வர்
திரு. ஆறு. திருமுருகன் அவர்கள்

உதவி ஆசிரியர்
சைவத்திரு கா. சிவபாலன் அவர்கள்

2005 பார்த்திப வருடம் புரட்டாதி மாதம்

வெளியீடு: ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம் மலர் **38**
தெல்லிப்பழை, இலங்கை. பதிவு இல. QD/74/NEWS/2005

## நிறுவன ரீதியாக எமது சமயத்தைக் காப்போம்

எமது நாட்டில் சைவப் பாரம்பரியத்தை காப்பதற்கும் சைவ மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்துவதற்கும் நிறுவனங்கள் அவசியம் என்பதனை முதன் முதல் எடுத்துரைத்தவர் ஆறுமுகநாவலர் பெருமான். நிறுவன ரீதியில் சைவ சமயத்தைக் காப்பதற்காக 1889இல் சைவ பரிபாலனசபை உருவாக்கப்பட்டது. இச்சபை கல்வியூடாக சமய நெறிமுறைகளைக் காக்கும் முயற்சியில் துரிதமாகச் செயற்பட்டு வந்துள்ளது. 1890இல் உருவாக்கப்பட்ட இந்துக் கல்லூரிச் சபையும் எமது சமயம் சார்ந்த கல்விச் சாலைகளைக் கட்டியெழுப்புவதில் முன்னின்று உழைத்தன. இச்சபையின் முயற்சியால் நாவலர் கண்ட கனவு நனவாகியது. இந்துக்களுக்கு உயர் ஆங்கிலக் கல்லூரி உருவாக வேண்டும் என நாவலர் விடுத்த வேண்டுகோள் இச்சபையினால் 1890இல் யாழ் இந்துக்கல்லூரி உருவாக வித்திட்டது. திருவாளர்கள் சி. நாகலிங்கம்பிள்ளை, ந. கைலாசபிள்ளை, தா. செல்லப்பா பிள்ளை, சி.த. மு. பசுபதிச்செட்டியார், சி. சபாபதிப்பிள்ளை ஆகிய பெரியவர்கள் நிறுவன ரீதியாகச் செயற்பட்டு உருவாக்கியதே புகழ் பூத்த யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி ஆகும். இக்கல்லூரிக்கு 1897இல் சுவாமி விவேகானந்தரும் 1927இல் மகாத்மாகாந்தியும் வந்து சொற்பொழிவு ஆற்றுவதற்கு அன்று மிக ஆளுமையுள்ள எமது சமயம் சார்ந்த நிறுவனங்கள் ஈழத்தில் இருந்தமையே முக்கிய காரணம் ஆகும். 1924ஆம் ஆண்டு சைவ மக்களின் கல்வி வளர்ச்சியில் மிஷனரிமார்களுக்கு ஈடுகொடுக்கக் கூடியதாக பெரியதொரு நிறுவனம் அமைக்கப்பட்டது. அந்நிறுவனமே சைவ வித்தியா விருத்திச் சங்கமாகும் [Hindu Board of Education] இதனை தோற்றுவித்த மூல காரணர் சேர். பொன்னம்பலம் இராமநாதன் அவர்கள் தாம் எனினும் சேர். வைத்திலிங்கம் துரைச்சாமி இந்துபோட். சு. இராசரத்தினம் அவர்களின் அயராத தொண்டே இந்நிறுவனம் வியாபிப்பதற்கு காரணம் என வரலாற்றாளர் குறிப்பிடுவர். ஸ்ரீமான்

பொது சன நூலகம்
யாழ்ப்பாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இராசரத்தினம் அவர்கள் சைவ வித்தியாவிருத்திச் சங்கத்தினூடாக பல நூறு பாடசாலைகளை உருவாக்குவதற்கு பெரிதும் உழைத்தார். இந்நிறுவனம் திரு.சு. சபாரத்தினம் அவர்களின் பணியினால் ஆங்கிலப்பள்ளி, ஆரம்பபள்ளி, இரு மொழிப்பள்ளி என பலவகைக் கல்விச் சாலைகளை நன்முறையில் நிர்வகித் தது. 1960இல் இலங்கை அரசு பாட சாலைகளை தேசிய உடமை ஆக்கிய பொழுது சைவவித்தியாவிருத்திச் சங்கம் தன் நிர்வாகத்தில் இயக்கிய 161 பாடசாலைகளையும் [இப் பாடசாலை களில் சுமார் நாற்பதாயிரம் மாணவர்கள் கற்றனர்] சைவ ஆசிரியர் கலாசாலை யையும் அரசிடம் கையளித்தது. எனினும் சைவ வித்தியாவிருத்திச் சங்கத்தால் நிறுவப் பட்ட சிறுவர் நிறை வாழ்வு இல்லம் இன்றுவரை இச்சங்கத்தால் நிர்வகிக்கப்பட்டு வருகின்றது. சுவாமி விவேகானந்தரின் வருகைக்குப் பின் விபுலானந்த அடிகளாரின் முயற்சியால் ஈழத்தில் இராமகிருஷ்ணமிஷனின் நிறுவன ரீதியான பணிகள் வளர்ச்சி பெற்றன. வண்ணை வைத்தீஸ்வரா வித்தியாலயம் முதல் மட்டக்களப்பு, திருகோணமலை போன்ற இடங்களில் பல பாடசாலைகளை இந்நிறுவனம் கட்டியெழுப்பியது. 1925இல் கல்லடி உப்போடையில் சிவானந்த வித்தியாலயம் அடிக்கல் நாட்டப்பட்டு 1929இல் அப்பாடசாலை திறக்கப்பட்டது. பெண்கள் கல்வி வளர்ச்சி யிலும் இந்நிறுவனம் அக்கறை கொண்டு பல பாடசாலைகளை உருவாக்கியது. தலைநகர் கொழும்பில் 1902ஆம் ஆண்டு யூலை மாதம் 17ஆந் திகதி விவே கானந்தசபை நிறுவப்பட்டது. கொழும்பில் தாய்மொழியூடாக கல்வி வழங்கும் சட்டம் உருவாக்கப்பட்ட போது நிறுவன ரீதியாக எமது சமயப் பிள்ளைகளுக்கு கல்விச்சாலைகளை உருவாக்கிய முதல் நிறுவனம் விவேகானந்தசபை என்பது குறிப்பிடத்தக்கது. தலைநகர் கொழும்பில் சைவப்பாரம்பரியத்தோடு கூடிய கல்வி பண்பாட்டைப்பேணும் வகையில் 1951இல் இந்துக் கல்விச் சபை என்ற அமைப்பு **[The Hindu Educatioal So^{CI}ety]** உருவாக்கப்பட்டது. இச்சபையின் முயற்சியால் உருவாக் கப்பட்டதே கொழும்பு இரத்மலானை இந்துக்கல்லூரி, பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரி ஆகும்.

நிறுவனத்திற்கு இணையாக நாவலர், சேர். பொன்னம்பலம் இராமநாதன் மற்றும் சில பிரமுகர்கள் கல்விச்சாலைகளை உருவாக்கி இக்காலப்பகுதியில் பணியாற்றியமையும் குறிப்பிடத்தக்கது. இந்நிறுவனங்களைத் தவிர ஈழத்தில் அகில இலங்கை இந்துமாமன்றம், நல்லூர் திருஞானசம்பந்தர் ஆதீனம், திவ்விய ஜீவன சங்கம், கந்தர்மடம் வேதாந்த மடம், கொழும்பு இராமகிருஷ்ணமிஷன், அகில இலங்கைச் சேக்கிழார் மன்றம், நாவலர் சபை என பல்வேறு நிறுவனங்கள் தோற்றம் பெற்றன. இவற்றோடு இந்துப் பேரவை, இந்து இளைஞர்கள் சமாசங்கள், மன்றங்கள், என பிரதேச வாரியாகவும், கிராமங்களிலும் உருவாக்கப்பட்டன. மேற்குறித்த நிறுவனங்கள் அன்று சாதித்த சாதனைகளில் பத்தில் ஒரு பங்கைக் கூட இன்றைய நிறுவனங்களால் சாதிக்க முடியவில்லை. சைவ பரிபாலனசபை, சைவ வித்தியா விருத்திச்சங்கம் தமது பணிகளை சுருக்கிக்கொண்டது. அகில இலங்கை இந்துமாமன்றம் 50 வருட வளர்ச்சியில் புதிய பணிகளை முன்னெடுத் துச் சென்றுள்ளது. காலத்தின் சூழ்நிலையும், எமது நிறுவனங்களின் வளர்ச்சி யைக் கட்டுப்படுத்தி விட்டது. இன்றைய சூழலில் சைவ நிறுவனங்கள் விழிப்புடன் செயற்பட்டு எமது நெறி முறைகளைக் காக்க முன்வர வேண்டும் சைவ சமய நிறுவனங்கள் நன்கு திட்டமிட்டு ஒருங்கிணைப்புகளை ஏற்படுத்தி செயற்பட வேண்டிய அவசியத்தை புலம்பெயர் நாடுகளில் வாழும் ஈழத்து சைவர்களால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


உருவாக்கப்பட்ட நிறுவனங்கள் வலியுறுத்தி வருகின்றன. புலம் பெயர்ந்து வாழும் சைவ மக்களால் உருவாக்கப்பட்ட நிறுவனங்கள் உலகரீதியான சைவ மகாநாடுகளை நடாத்தி வருகின்றன. அவ்வகையில் லண்டனில் ஆண்டு தோறும் சைவத் திருக்கோயில் ஒன்றியத்தினால் சைவ மகாநாடு கூட்டப்படுகிறது. உலக சைவப் பேரவையால் பல்வேறு நாடுகளில் சைவ மகாநாடுகள் நடாத்தப்படுகிறது. அவுஸ்திரேலியா சிட்னி முருகன் கோவிலில் 2006 ஜனவரி மாதம் உலக மகாநாடு நடைபெற உள்ளது.

ஈழத்திலுள்ள சமய நிறுவனங்கள் உணர்வு பூர்வமாகச் செயற்பட்டு முன்பு எம்மவர் மத்தியில் உருவாக்கிய சைவ நிறுவனங்கள் ஆற்றிய பணிகளை மீள நினைந்து சோர்வுகளைத் தவிர்த்து ஈழத்து சைவ சமயத்தின் எதிர்கால நலன்களில் அக்கறையோடு செயற்பட முனைவோமாக.

- ஆசிரியர்

❑❑❑ ❑❑❑ ❑❑❑

# கோமாதாவில் கொலுவிருக்கும் தெய்வங்கள்



| | | |
|---|---|---|
| கொம்பின் அடியில் | - | பிரமவிட்டுணுக்கள் |
| கொம்பின் நுனியில் | - | கோதாவரி முதலிய தீர்த்தங்களும் சராசரங்களும் |
| சிரத்தில் | - | சிவன் |
| நடுநெற்றியில் | - | உமாதேவி |
| மேல் நாசியில் | - | முருகக்கடவுள் |
| உள்நாசியில் | - | நாகேசர் |
| இரு காதுகளிலும் | - | அச்சுவினி தேவர் |
| இரு கண்களிலும் | - | சூரிய சந்திரர் |
| பல்லில் | - | வாயு |
| நாவில் | - | வருணன் |
| ஹுங்காரத்தில் | - | சரஸ்வதி |
| இருதயத்தில் | - | இயமன் |
| கண்டத்தலத்தில் | - | இயக்கர் |
| உதட்டில் | - | உதய அஸ்தமனசந்திகள் |
| கழுத்தில் | - | இந்திரன் |
| திமிலில் | - | அருக்கர்கள் |
| மார்பில் | - | சாத்தியர் |
| நான்கு கால்களிலும் | - | அனிலவாயுக்கள் |
| முழந்தாள்களில் | - | மருத்துவர் |

| | | |
|---|---|---|
| குரத்தின் நுனியில் | - | நாகலோகத்தார் |
| குரத்தின் நடுவில் | - | கந்தருவர் |
| மேற்குரத்தில் | - | தேவமாதர்கள் |
| முதுகில் | - | உருத்திரர் |
| சந்திகளில் | - | வசுக்கள் |
| அரைப்பலகையில் | - | பிதிரர்கள் |
| பகத்தில் | - | சத்தமாதர்கள் |
| அபானத்தில் | - | இலக்குமி |
| அடிவாலில் | - | நாகேசர் |
| வால் மயிரில் | - | சூரியன் ஒளி |
| மூத்திரத்தில் | - | கங்கை |
| சாணத்தில் | - | யமுனை |
| உரோமத்தில் | - | முனிவர்கள் |
| உதரத்தில் | - | பூமாதேவி |
| முலையில் | - | சமுத்திரம் |
| வயிறு, இருதயம், | - | காருகபத்தியம் முத |
| முகம் | - | லிய அக்கினி மூன்றும் |
| எலும்பிலும், | | |
| சுக்கிலத்திலும் | - | யாகங்கள் |
| எல்லா | | |
| அவயவங்களிலும் | - | கற்புடை மகளிர் |

நன்றி-சிவதருமோத்தரம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துர்க்காதேவியின் அருட்பிரவாகம்

கலாநிதி சிவத்தமிழ்ச்செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள்

சமயம் என்பது மனிதனுடைய அன்றாட வாழ்க்கை அலுவல்களிலிருந்து விடுவிக்கக்கூடிய ஒரு சிறந்த மார்க்கமாகும். இது இம்மை, மறுமை, வீடு மூன்றுக்கும் வழிகாட்டும். மனிதனுடைய புறவாழ்வுக்கு ஊனும், உடையும், உறையுளும் தேவைப்படுவது போல் அகவாழ்வுக்கு வழிபாடு தேவையாகும். இவ் வழிபாட்டைப் பலவகையில் வேறு வேறு காலங்களில் நடாத்தி வருகின்ற மரபு பல நூற்றாண்டு காலமாகப் பேணப்பட்டு வருகிறது.

மனித வாழ்க்கை செந்நெறியிற் கழிய வேண்டுமானால் அறிவும், பொருளும், வீரமும், நல்லோர் சேர்க்கையும் நமக்குத் தேவை. இவற்றை உலக மாதாவாகிய தாயே உலகத்தவர்க்கு வழங்குகிறாள். "அவள் தந்த ஆக்கமிவ்வுலகெல்லாம்" என்று சித்தாந்தம் கூறுகிறது. நமது பேச்சும், மூச்சும், ஆக்கமும், ஊக்கமும், ஏற்றமும், தோற்றமும், அவளாலேயே வந்தமைந்துள்ளன. அவளே அருட்சக்தி மாரிபோல் அவளருளை வாரி வழங்குகின்ற தெய்வம் அவள். அப்பனாகிய அவனும் அம்மையாகிய அவளும் ஒரு வடிவமே. ஒன்று அறிவுச் சொரூபம். மற்றது அன்புச் சொரூபம். சில இடங்களில் எம்பெருமானை "அத்தா" என்று அழைத்துப் பாடிய நாயன்மார் வேறு சில இடங்களில் "அன்னே" என்று பாடுகிறார்கள்.

**"அன்னே அன்னே என்றும் சில சமயம்**
**நின்னையே ஐயா ஐயா என்னவே**
**அலறிடும் சிலசமயம்"**

என்றார் தாயுமானவர். அம்மையும் அப்பனுமாய் இறைவனை வழிபட்டே அடியார்கள் அருளமுதம் மாந்தினர். இறைவன் யோக வடிவிலேயும் தேவியுடன் இருந்தே அருள் பாலிக்கிறான் என்பதை மணிவாசகர் திருவாசகத்தில் எடுத்துக் காட்டுகிறார்.

**"நானும் என் சிந்தையும் நாயகனுக் கெவ்விடத்தோம்**
**தானும் தன் தையலும் தாழ்சடையோன் ஆண்டிலனேல்"**

என்பது அவர் கூற்றாகும்.

**"மதிநுதல் மங்கை யோடு வடபா லிருந்து**
**மறையோதும் எங்கள் பரமன்"**

என்று பாடுகிறார் ஞானசம்பந்தப் பெருமான். எனவே யோக வடிவிலும், கோர வடிவிலும், சிவமும் சக்தியும் இணைந்தே தொழிற்படும் என்பது புலனாகும். தேவியின் அருள் பெற்றவர்கள் பலர். கம்பர், காளமேகம், காளிதாசர், குமர குருபரர், பாரதியார் போன்ற கவிஞர் பெருமக்கள் தேவியை வழிபட்டுப் புலமை பெற்று அரசரோடு சரியாசனத் தகைமைக்குரியராயினர். பட்டர் தமது அபிராமி அந்தாதியில் தேவி வழிபாட்டினால் அடையும் பேறுகளை விளக்குகிறார்.

**"சொல்லும் பொருளும் எனநட மாடும் துணைவருடன்**
**புல்லும் பரிமளப் பூங்கொடி யேநின் புதுமலர்த்தாள்**
**அல்லும் பகலும் தொழுவார்க் கேஅழி யாஅரசும்**
**செல்லும் தவநெறி யும்சிவ லோகமும் சித்திக்குமே"**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்கள் தெல்லிப்பழை துர்க்காதேவியின் மகோற்சவம் நடைபெறுகிற நாட்கள் இதுவாகும். ஆவணித் திருவோணத்தோடு பூர்த்தியாகும். (15-09-05) இவ்வுற்சவ காலங்களில் பெருந்திரளான பக்தர்கள் வந்து வழிபட்டுச் செல்வதும் அன்னதானத்தில் பங்குபற்றுவதும் மேலும் சிறப்பாக தத்தமது நேர்த்திக் கடனின் பொருட்டு கற்பூரச்சட்டி எடுத்தல், காவடி எடுத்தல், அடி அழித்தல், அங்கப் பிரதிட்டை செய்தல் ஆகியன இந் நாட்களின் விசேட நிகழ்ச்சிகளாகும். அவலங்களை நீக்கி பாவங்களை அகற்றி நிம்மதியான வாழ்வை வழிபடுவோருக்கு அருளுபவள் துர்க்காதேவி. இதனாலேயே துர்க்கையம்மன் வாசலிலே "துர்க்கா சரணம் துர்க்கா சரணம்" என்ற ஓசைக்குக் குறைவில்லை. இன்று எங்கள் வாழ்வும் வளமும் துர்க்கை தான் என்ற கருணை உள்ளம் உலகமெங்கும் பரவிக் காணப்படுகிறது. இதன் காரணமாக உலக நாடுகள் எங்கணும் துர்க்கை அம்மன் கோயில்கள் கட்டப்பட்டு வழிபாடுகள், விழாக்கள் நடைபெறுவதும் கண்கூடு. எனவே "தொழுத கைக்கு வளம் அளிக்கும்" துர்க்கா தேவியைப் போற்றி வழிபட்டு நிற்போமாக.

ப ப ப ▭▭▭ ▭▭▭

## பேராசிரியர், பண்ணிசை
## கலாநிதி S.K. சிவபாலன்
M.A.Ph. dip.



பண்ணிசைக் கச்சேரிகள் நிகழ்த்தும் பேராசிரியர் S.K. சிவபாலன் அவர்கள் சிதம்பரம் அண்ணமலைப் பல்கலைக்கழக இசைத்துறையில் பேராசிரியராய்ப் பணி புரிந்தார். இன்று எம்மத்தியில் இல்லை. எம் போன்றவர்க்கு மானசீகக் குரு. தேவாரத் திருமுறை களிலே அலாதியான பிரியம். மனப்பாடம் செய்யும் பண்பு. இவையிரண்டு குணாம்சங்களும் எல்லோருக்கும் வாய்த்தற்கரியவை. பண்ணிசைக் கலாநிதி அகத்தாலும், முகத்தாலும் எளிமை வாய்க்கப் பெற்றவர். கொள்கைச் சான்றோன் பதவியால் கல்விமான், பேராசிரியர் என்று வாழும் சிலர் சமயமே இல்லை, தெய்வம் என்பதை விட முயற்சியும் அறிவுமே பிரதானம், திருமுறை பாடும் பணியே பணி என்று மிகமிக உயர்ந்த நிலைக்கொள்கைகளுடன் இன்றும் வாழ்கின்ற சூழ்நிலையிலே பேராசிரியர், பண்ணிசைக் கலாநிதி S.K. சிவபாலனார் தமிழையும், சைவத்தையும் நேசித்ததுடன் முழுமுதற் கடவுளாம் சிவப்பரம்பொருளையே வாயாரப் பாடிப்பரவியவர். நாம் அவருக்குச் செய்யும் பிரதியுபகாரம் பட்டி தொட்டியெங்கும் பண்ணிசை அரங்குகளை நிகழ்த்தித் திருமுறைத் தமிழை வாழ்விப்பதே. அன்னாருக்கு அஞ்சலி செய்வோமாக.

28-07-2005 அன்பன் வாகீச கலாநிதி கனகசபாபதி நாகேஸ்வரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துவாரபாலகர்களிடம் அனுமதி பெற்றே கோயிலை வழிபடுவோம்.

குமாரசாமி சோமசுந்தரம் அவர்கள்

கோயில் என்றால் இறைவன் உறையும் இடம் என்று பொருள். "ஆலயந் தானும் அரன் எனத் தொழுமே" என மெய்கண்டார் நமக்கு அறிவிக்கிறார். ஆலயத்திலுள்ள ஒவ்வொரு பொருளும், ஒவ்வோர் அங்கமும் தொழுது வணங்குதற்குரியவை. அவற்றைத் தூய்மையாக வைத்திருக்க வேண்டும். சைவ ஆகமங்களுக்கேற்ப அமைக்கப்பட்ட கோயில்களில் மூலஸ்தானத்தின் மேலே உயர்ந்த ஸ்தூபி காணப்படும். திருக்கோயிலின் வாயில் முகப்பிலே நீண்டுயர்ந்த திருக்கோபுரம் அமைக்கப்பட்டிருக்கும். திருக்கோபுரத்தின் நுழைவாயிலுக்கு இருமருங்கிலும் இரண்டு வாயில் காப்போர் காணப்படுகின்றனர். இவர்களைத் துவாரபாலகர் என அழைக்கின்றனர். இவ்வாறு துவாரபாலகர் இருவர் இடம்பெற வேண்டியது ஆகமவிதியாகும். துவாரபாலகர், தற்காலத்துப் பாதுகாப்பு காவலர் போன்றவர்கள். நமக்குத்தான் பாதுகாப்புத் தேவையென்றால், இறைவனுக்குமா, காவலர்கள் தேவைப்படுகின்றனர். என 'எண்ணத் தோன்றுகின்றதல்லவா? உண்மையில், நம் எல்லோரையும் காத்தருளும் இறைவனுக்குக் காவலர்கள் தேவையில்லை. உலகத்தவருக்கு வழிகாட்டுவதற்காகவே இவ்வாறான ஒழுங்கு முறை வகுக்கப்பட்டுள்ளது.

வாயிற் காவலர்களாக உள்ள துவாரபாலகர்கள் பூதகணத்தவர். எனினும், சாந்தம் நிறைந்தவர்களாய், நின்ற நிலையில்காவல் செய்கின்றனர். நம் ஒவ்வொருவருக்கும் காவல் தேவையே என்பதை இவர்கள் உணர்த்துகின்றனர். துவாரபாலகர் அறியாமல், கோயிலுக்குள் யாரும் செல்ல முடியாது. நாம் கோயிலுக்குள், சுவாமி தரிசனத்திற்குச் செல்லும் போது, கோபுர வாயிலின் இருமருங்கிலும் உள்ள துவாரபாலகரிடம் அனுமதி பெற்றே செல்ல வேண்டும் என்பது விதிமுறையாகும். விதியை அனுசரிப்பது சமய வாழ்வு ஆகும்.

துவாரபாலகர், கதாயுதத்தைக் கையிலேந்தியிருப்பர். ஒரு கையிலுள்ள ஆட்காட்டி விரலை உயர்த்தி, மற்றைய விரல்களை மடக்கியிருப்பதும் ஓர் அற்புதக் காட்சியாகும். இறைவன் ஒருவனே என்பதை இந்த ஆட்காட்டி விரல் சுட்டிக்காட்டுகிறது. உள்ளே திருவுருவங்கள் பல உள்ளன; அவையாவும் ஒருவனையே குறிக்கும். கடவுள் ஒன்று, உண்மை ஒன்று என்னும் பாடத்தை ஆலயத்திற்கு வருபவர்களுக்குப் போதிப்பதாக உயர்த்தப்பட்ட ஒரு விரல் அமைகின்றது.

"யாதொரு தெய்வங் கொண்டீர், அத் தெய்வமாகி யாங்கே
மாதொரு பாகனார் தான் வருவர்"

என்று சாஸ்திர நூல் கூறுகின்றது. இந்த உண்மையைத் தான் துவாரபாலகரும் சுட்டிக் காட்டுகின்றனர்.

துவாரபாலகரின் மற்றொரு கையின் உள்ளங்கை குவிந்த நிலையில், விரல்கள் ஐந்தும் உயர்ந்து நிற்கும் முத்திரை குறிப்பது உள்ளே அதிசயம் உண்டு; அற்புதம் உண்டு; அருமருந்து உண்டு; சென்று பாருங்கள் என்று கூறுவதாக உள்ளமையாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தத் துவாரபாலகருக்குத் தெரியாமல் கோயிலுக்குள் எவரும் நுழைய முடியாது. அவர்கள் வெறுங்காவலர்கள் மட்டும் அல்ல, ஞானியரும் கூட, காவல்துறைக்கு இலக்கணம் வகுப்பவர்களாக அவர்கள் உள்ளனர். கடமை, கண்ணியம், கட்டுப்பாட்டுடன் காவல் புரிபவர்கள் இத்துவாரபாலகர். இவர்கள் யாவர், பூர்வீகம் என்ன, என்பவற்றைத் தெரிந்து கொள்ளவேண்டாமா.

துவாரபாலகர்களாக விளங்குபவர்கள், முன்னர் சிவபெருமானின் பரமவைரிகள். முன்னர் ஒருகால், தாருகாக்கன், கமலாக்கன், வித்தியுன்மாலி என்னும் பெயர்களுடன் மூன்று அசுரர்கள், மூவகை உலோகங்களினால் பறக்கும் கோட்டைகளை அமைத்து, ஆகாயத்தில் பறந்து திரிந்து, பிறரை வருத்தித் துன்பங்களைச் செய்து வந்தனர். முப்புரத்தவர் என இவர்கள் அழைக்கப்பட்டனர். சிவபெருமான் தமது சிரிப்பினால் இவர்களின் முப்புரங்களையும் எரித்து, துன்பங்களை நீக்கியருளினார். அசுரர்கள் மூவரையும் மன்னித்து அருளினார். மன்னிப்பது கடவுளின் தன்மை என்பது இதனால் புலப்படுகிறது. பகைவர்க்கும் அருளும் இயல்பு எம்மிடம் இருக்குமேயானால் நாமும் தெய்வீகத்தை உடையவர் ஆவோம்.

இம்மூன்று அசுரர்களில் இருவரை, துவாரபாலகராயும், ஒருவரை குடமுழா அடிப்பவராகவும் இறைவன் அமர்த்தியருளினார். துவாரபாலகர் இருவரினதும் திருநாமங்கள் சண்டன், பிரசண்டன் என்பனவாகும். இவர்கள் இறை விசுவாசிகளாக உள்ளனர். பகைவரையே விசுவாசிகளாக்கும் திறன் கடவுளின் திருவருட் பார்வைக்கு உண்டு. இறைவனின் நம்பிக்கைக்கு பாத்திரமாகி விட்ட துவாரபாலகர் வணக்கத்திற்கும் வழிபாட்டிற்கும் உரியவராகவுள்ளனர். இவர்கள் திருக்கோபுரத் தளங்களிலும், உள்ளே ஆதிமூலத்து வாயிலிலும் அமைதியாகக் காவல் செய்கின்றனர்.

நாமும், இறைவனை வழிபாடு செய்ய ஆலயத்திற்குச் செல்லும் போது, நடைமுறையை அனுசரித்து துவாரபாலகரிடம் அனுமதி பெற்றே உட்செல்ல வேண்டுமென்பதைக் கருத்திற் கொள்வோமாக. சட்டத்தைப் பேணுவதும், ஒழுங்கினைக் கடைப்பிடிப்பதும் சமய வாழ்விற்கு இன்றியமையாதன.


## சிவபூமி கண்தானச் சபை

தானங்களில் சிறந்த தானமான கண் தானத்தைச் செய்ய முன்வாருங்கள்
உங்கள் இறப்பிற்குப் பின் பார்வையற்று இருக்கும் ஒருவருக்கு
ஒளி கொடுக்க நீங்கள் உதவுங்கள். வாழும் போதே

இப்புண்ணிய காரியத்துக்கு
ஒப்புதல் தாருங்கள்.


தொடர்புகளுக்கு:
ஆறு.திருமுருகன்
தொலைபேசி
021-222 6550

கண் வைத்திய நிபுணர்கள்:
Dr. ச. குகதாசன், 021-222 3645
Dr. சிவநந்தா, 021-222 3149
யாழ்.போதனா வைத்தியசாலை

# சிவதொண்டு செய்பவரைத் தடுப்பது குற்றம்

திரு. நா. நல்லதம்பி அவர்கள்

நாம், ஆலயங்களிலே சுவாமி தரிசனம் முடித்துவிட்டு இறுதியில் சண்டேசுரரிடம் போய், மூன்றுமுறை கைகொட்டி வணங்கி, நமக்கு நமது தரிசன பலனைத் தரும்படி கேட்டு விடைபெறுகின்றோம்.

அவ்வாறு சண்டேசுரரிடஞ் செல்லாது வீடு திரும்புவது, எமது வழிபாட்டைப் பூர்த்தி செய்யாது விட்டது போலாகும் என்பர் பெரியோர்.

சிவனருளாலே சிவனை வணங்குகிறோம். அவனது அருளைப் பெறுவ தற்குச் சண்டேசுரரிடம் கேட்கவேண்டும்! சிவபெருமான் பலவிதமான மூர்த்தங்கள் எடுத்துப் பஞ்ச கிருத்தியங்களைச் செய்கின்றார். அவற்றுள் ஒன்றுதான் சண்டேசுர மூர்த்தம். சிவபெருமான் இந்தப் பதவியோடு வேறும்பல உரிமைகளையும் அளித்திருக்கின்றார்.

இதன் பிரகாரம் சண்டேசுரரே சிவதொண்டர்களுக்கெல்லாம் தலைவன்; சிவபெருமான் ஏற்றுக்கொண்ட அமுதும், பரிவட்டமும், புட்பமும் சண்டேசுரருக்கே உரியது.

இந்தப் பதவிக்குச் "சண்டீசன்" என்று பெயர். சண்டீசன் என்றால் "யாருக்கும் பலன் கொடுப்பவன்" என்று பொருள். 'சங்கரன்' என்றால் "சுகத்தைக் கொடுப்பவன்" என்பது போல.

சண்டேசுரருக்கு இப்பதவியை அருளிச் செய்த சிவபெருமான், மிகுந்த மகிழ்ச்சிக்கு காரணமாகத் தமது சடாமுடியில் அணிந்திருந்த மருவார்கொன்றை மாலையை எடுத்துச் சண்டேசுரருக்குச் சூட்டினார் எனப் பெருமிதங் கொள்கிறார் சேக்கிழார். இவ்வாறான சண்டீச பதத்தைப் பெற்றவர், விசாரசருமர் என்கின்ற இயற்பெயரையுடைய சண்டேசுர நாயனார் ஆவர்.

சிவதொண்டர்களுக்குக்கெல்லாம் தலைமையான பதவியை பெற்றுக் கொள்ளும் தவப்பேறு இவருக்கு வாய்த்தது எப்படி என்று பார்ப்போம்.

விசாரசருமர், சோழ மண்டலத்திலே திருச்சேய்ஞல் ஊரிலே எச்சதத்தன் என்னும் பிராமனனுக்கும் பவித்திரை என்ற அவரது மனைவியாருக்கும் மகனாக அவதாரஞ் செய்தார். இவர், ஐந்து வயதிலேயே வேதசிவாகமங்களையும் பிற கலைகளையும் பற்றிய அறிவுடையவராகத் திகழ்ந்தார் என்று சேக்கிழார் கூறுகின்றார். "ஒருமையிற் தான் கற்ற கல்வீ ஒருவற்கு
எழுமையும் ஏமாப் புடைத்து"
என்னும் வள்ளுவர் கூற்றும் நோக்கத்தக்கது.

அன்றியும், "பூவாதே காய்க்கும் மரமும் உள, மக்களுள்ளும்
ஓவாதே நின்றுணர்வார் தாமுளரே......" (நல்வழி) என்ற ஔவையார் வாக்கும் காணலாம்.

ஆன்மாக்களாகிய நாமெல்லாம் மலபந்தம் உள்ளவர்கள் என்பதும், அம்மலபந்தத்தை நீக்கி நித்தியமான பேரின்பத்தைத் தருகின்ற ஒரு பதி இருக்கின்றார் என்பதும் விசாரசருமருக்குத் தெரிந்திருந்தன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதி, நமக்குப் பேரின்பந் தரும் பொருட்டுப் படைத்தல், காத்தல், அழித்தல், அருளல், மறைத்தல் ஆகிய ஐந்தொழில்களைச் செய்கின்றார் என்றும்,

சிவபெருமானுக்கு, தம் வயத்தராதல், தூய உடம்பினராதல், இயற்கை உணர்வினராதல், முற்றுமுணர்தல், இயல்பாகவே பாசங்களினீங்குதல், பேரருளுடைமை, முடிவிலாற்றலுடைமை, வரம்பிலின்பமுடைமை ஆகிய எட்டுக் குணங்கள் உண்டு என்பதை உணர்ந்திருந்தார் என்றும் புராணங் கூறுகின்றது.

"கோளில் பொறியிற் குணமிலவே எண்குணத்தான்
தாளை வணங்காத் தலை"

எனத் தெய்வப் புலவர் இறைவனுக்கு எண்குணங்கள் இருப்பதாகப் பாடியுள்ளமையுங் கவனிக்கத் தக்கது.

சிவபெருமான் தமது சக்தியின் துணையாலே ஐந்தொழில்களையும் செய்கின்றார். அவர் நமக்கு பெறுதற்கரிய இந்த மானிடப் பிறவியைத் தந்திருப்பது அவனருளாலே அவனை மேலும் வணங்கி அருள்பெறும் நல்வினைகளைச் செய்ய வேண்டும் என்பதற்கேயாம் என்பதனையும், அவ்வாறு நல்வினைகளை நாளைக்கு என்று பின்போடாமல் இன்றே செய்யவேண்டும் என்பதனையும் விசாரசருமர் தெரிந்து வைத்துள்ளார் எனக் கூறுவார் சேக்கிழார்.

அன்றறிவாம் என்னாது அறஞ்செய்க மற்றது
பொன்றுங்காற் பொன்றாத் துணை

என்று வள்ளுவர் வாய்மொழியும் இருத்தல் காணலாம்.

மேலும்,

மற்றறிவாம் நல்வினை யாம் இளையம் என்னாது
கைத்துண்டாம் போழ்தே கரவா தறஞ்செய்மின்
முற்றியிருந்த கனியொழியத் தீவளியால்
நற்கா யுதிர்தலும் உண்டு.

என்று நாலடியார் கூறுகின்றது. இவ்வாறான தன்மையுடையவரான விசாரசருமர் ஒரு நாள் தமது பள்ளித் தோழர்களோடு இடைச்சேரிக்குச் சென்றிருந்தார். அங்கே இடையன் ஒருவன் பசு மாட்டை அடிப்பதைக் கண்டு கோபங்கொண்டார்.

இடையனை அடிக்கவிடாது தடுத்து நிறுத்திய விசாரசருமர், கோமாதாவின் சிறப்பினை அவனுக்கு விளக்கிக் கூறினார். பசுக்களின் உறுப்புகளிலே தேவர்களும் முனிவர்களும் தீர்த்தங்களும் இருக்கின்றன. பசுக்கள் தரும் பஞ்சகவ்வியங்கள் சிவபிரானுக்கு அபிடேகத் திரவியமாகிறது. சாணத்திலிருந்து விபூதி தயாரிக்கப் பெறுகிறது என்பவற்றையெல்லாம் சொன்ன விசாரசருமர், "நீ இனிமேல் இப்பசுக்கூட்டங்களை மேய்க்க வேண்டியதில்லை. நானே மேய்ப்பேன்" என்றார். இடையன் மறுவார்த்தை பேசாமல் பயந்து கும்பிட்டுக் கொண்டு போய் விட்டான்.

விசாரசருமருடைய பராமரிப்பில் பசுக்கள் நன்கு பாலைப் பொழிந்தன. பசுக்களுடைய சொந்தக்காரரான அந்தண மக்களும் மிகவும் மகிழ்ச்சியுற்றனர்.

சில காலஞ் செல்ல, விசாரசருமருடைய மனதிலே, பசுப்பாலைக் கொண்டு சிவபெருமானுக்குத் திருமஞ்சனஞ் செய்யும் விருப்பம் உண்டாயிற்று.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மண்ணியாற்றங் கரையிலே, மண்ணினால் இலிங்கம் அமைத்தார். குடங் குடமாகப் பாலைக் கறந்து சிவனுக்குத் திருமஞ்சனஞ் செய்தார். பிராமணர் களுக்கும் முன்போலக் குறைவின்றிப் பாலைக் கொடுத்தன பசுக்கள்.

நெடுநாட்களாக இதனைக் கவனித்த ஒருவன், இதன் உண்மை நிலையை உணராதவனாக இந்தப் பாலையெல்லாம் மணலிலே ஊற்றி விளையாடுகிறா ரென்று விசாரசருமருடைய தந்தையாகிய எச்சத்தனிடம் சொல்லிவிட்டான்.

எச்சத்தன், மகனிடம் இது பற்றி எதுவுங் கேளாமலே அவனது செயற்பாடு களைத் தானே போய் அறிய எண்ணினார். விசாரசருமர் பசுக்களை மேய்க்கும் மண்ணியாற்றங் கரைக்குப் போய் அங்கு ஓரிடத்தில் ஒளிந்து இருந்து மகனது செயற்பாடுகளைக் கவனித்தார்.

வழக்கம்போல விசாரசருமர் பாலாபிடேகமும் பத்திர புட்ப அர்ச்சனையும் செய்து அன்போடு பூசனை புரிந்து கொண்டிருந்தார்.

எச்சத்தனுக்குக் கடுங்கோபம் உண்டாயிற்று. மறைவிடத்திலிருந்து வெளிப் பட்டுப் போய் மகனைக் கடுஞ் சொற்களால் ஏசி அடித்தார்.

தந்தையின் சூடான வார்த்தைகளோ அன்றி அடியோ விசாரசருமருடைய மனதில் படவில்லை. மனம் சிவபிரானுடைய அன்பான பூசனையில் மூழ்கிக் கிடந்தது. இதனால் மேலும் கோபமடைந்த எச்சத்தன், பாற்குடங்களைக் காலால் இடறிப் பாலைக் கொட்டினான்.

இப்பொழுது விசாரசருமருக்குக் கோபம் ஏற்பட்டது. பாலைச் சிந்தியது எச்சத்தனது தந்தையாகிய ஒரு பிராமணன். அவனது குருவும் எச்சத்தனே. இருந்தும் தனது சிவதொண்டைத் தடுத்தது பெரிய குற்றமென உணர்ந்தார். அவ்விடமிருந்த ஒரு தடியை எடுத்து எச்சத்தனது காலுக்கு அடித்தார். தடி வாளாகி அவனது காலை வெட்டிக் காயப்படுத்தியது.

தனது பூசைக்கு வந்த தடையை நீக்கிய திருப்தியோடு தொடர்ந்து பூசையில் ஈடுபட்டார் விசாரசருமர்.

அப்பொழுது சிவபெருமான் உமாதேவியாரோடு காட்சி கொடுத்தருளினார். விசாரசருமர் அது கண்டு பேரானந்தமடைந்து வணங்கி நின்றார்.

"நீ, எம்பொருட்டு உனது தந்தையையே வெட்டினாய். இனிமேல் நாமே உனக்குத் தந்தை"யென சிவபெருமான் விசாரசருமரை அன்போடு அணைத்துக் கொண்டார். இறைவனது கரங்கள் தீண்டப் பெற்ற விசாரசருமர் சிவமயமாகிப் பிரகாசித்தார்.

சிவபெருமான் சண்டீசன் என்னும் சண்டேசுர பதத்தை விசாரசருமருக்குத் தந்தருளினார். விசாரசருமருடைய பூசனையைத் தடுத்த எச்சத்தன் சிவத்துரோகஞ் செய்த குற்றத்துக்காளாகினான். ஆயினும் அவன் விசாரசருமருடைய தண்டனையைப் பெற்று, குற்றம் நீங்கியவனாகிச் சிவலோகஞ் சேர்ந்தான்.

ஆகவே, ஒருவர் செய்யும் சிவதொண்டினை இன்னொருவர் எக்காரணங் கொண்டும் தடுத்தலாகாது, தடுப்பது சிவத்துரோகமாகும் என்பதனை நாம் அறிந்து கொள்வோமாக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும், சிவதொண்டினைத் தடுத்ததாகிய குற்றத்துக்காத் தந்தையென்றும் பாராது தண்டித்தமை விசாரசருமர் செய்த குற்றமாகக் கொள்ளப்படாமையைக் காணலாம். அதனைக் குணமாகக் கொண்டு மகிழ்ந்து சிவபெருமான் சண்டேச பதவியைக் கொடுத்துள்ளமையுங் காணலாம்.

எனவே, சிவத்துரோகஞ் செய்பவரைத் தண்டிக்கும் உரிமையும் சண்டே சுரருக்கு இருக்கிறது! அந்த வேலை நமக்கில்லை!!

அரசன் அன்றறுப்பான், தெய்வம் நின்றறுக்கும் என்ற முதுமொழியும் இருக்கிறது.

"எல்லாம் சிவன் செயலே"

□□□ □□□ □□□

## ஆவணியில் அழகொளிரும் அன்னை கொடி ஏற்றம்

ஆவணியில் அழகொளிரும் அன்னைகொடி ஏற்றம்
ஆனந்த இசைகூட்டும் அருளொளியே பாடும்
தேவியிவள் அருள்சுரக்கும் தெய்வீகம் பேசும்
தெல்லிநகர்த் தேவிதுர்க்கை ஆலயத்தை நாடும்

மந்திரமும் மறையொலிகள் அந்தணர்கள் பாட
மாட்சிமிகு மலர்தூவிகள் தூவிநிதம் வாழ்த்த
சுந்தரமும் கொடியேறும் கடார்த்திபம் ஒளிரும்
சுந்தரியாம் அன்னையருள் சிந்தியெழில் கூட்டும்

அடியவர்கள் மனத்திலெழும் அகங்காரம் ஓட
ஆடிவரும் வேட்டைமிகு காட்டுமுயர் மாட்சி
கடிதினிலே மைவாட்டும் துயர்மறைந்து ஓட
கண்ணிறை விழுக்குதுக்கை காட்சிதரும் மாட்சி

திங்களொளி கண்டுவரும் சப்பரமும் பவனி
தீந்தமிழின் வேதவொலி கேட்டுமனம் உருகும்
பொங்குமே ருருள்கூட்டும் மின்னொளிகள் பேசும்
போற்றிதினம் போற்றியென பாடிமனம் உருகும்

சித்திர மணித்தேரின் நாதவொலி பேசும்
சீருடைய கொற்றவையே போற்றினைப் பாடும்
முத்திதரும் சித்திதரும் அன்னையருள் பூக்கும்
மூண்டகாற் திருவிழிகள் சோகவினை தீர்க்கும்

அன்னையருள் நீராடல் தன்னையுமே கண்டு
அகங்குளிரும் ஆனந்தப் பரவசமே தோன்ற
கண்விழிகள் இறையின்பக் காட்சியிலே மூழ்கி
எழிலுடையாள் ஸ்ரீவிஷ்ணு துர்க்கைபதம் நாடும்

கவியாக்கம்: க. குகதேவன், தெல்லிப்பழை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நம்பியாண்டார் நம்பியின் சைவத் தொண்டு

திருமதி யோகேஸ்வரி சிவப்பிரகாசம் அவர்கள்

சோழ நாட்டிலே சிதம்பரத்திற்கு அண்மையாக உள்ள திருநாரையூரிலே ஆதிசைவ மரபிலே தோன்றியவர் நம்பியாண்டார் நம்பி. இவரது தந்தையார் அங்கு எழுந்தருளியிருந்த பொல்லாப் பிள்ளையாருக்குப் பூசை செய்து வந்தார்.

நம்பி சிறுவனாயிருந்தபோது, ஒருநாள் தந்தையார் பூசை செய்ய முடியாது போனதால் இவரைப் பிள்ளையாருக்குப் பூசை செய்ய வருமாறு அனுப்பினார்.

பிள்ளையாருக்குப் பூசை செய்தபின் அவருக்குப் படைத்த நிவேதனப் பொருட்களைப் பிள்ளையார் உண்ணாததைக் கண்ட நம்பி, தான் பூசையில் ஏதோ தவறிழைத்துவிட்டதாக வேதனைப்பட்டார். தன் தவறை மன்னித்து நிவேதனப் பொருட்களை உண்ணவிடின் தன் உயிரை மாய்த்துக்கொள்ளப் போவதாகக் கூறி, கல்லிலே தலையை மோதி அழுதார். பிள்ளையார் அவரது வேண்டுதலை ஏற்று அவற்றை உட்கொண்டார்.

சிறுவயதிலேயே பொல்லாப் பிள்ளையாரால் ஆட்கொள்ளப்பட்ட நம்பியாண்டார் நம்பி மெய்யறிவும் தமிழ்ப்புலமையும் கூடிவரப் பெற்றவராக விளங்கினார்.

தேவாரத் திருமுறைகள் இருக்குமிடம் அறியாது சோழமன்னனும் அவைப் புலவர்களும் கவலையுற்று இவரை அணுகியபோது பிள்ளையாரின் அருளினால், சிதம்பரத்தில் பொற்சபைக்கு அருகிலோர் அறையில் திருமுறைகள் பூட்டி வைக்கப்பட்டிருப்பதை அறிந்து கூறினார்.

அரசன், அவற்றை எடுப்பதற்காக சிதம்பரத்து தீட்சதர்களிடம் சென்று அறையைத் திறக்குமாறு வேண்டினார். அவர்களோ தேவாரம் பாடிய மூவரும் வந்தால் மட்டுமே அறையைத் திறக்க முடியுமெனக் கூறிவிட்டனர்.

அரசன் நடராசப்பெருமானுக்கு அபிடேகம், பூசை ஆகியவற்றைச் சிறப்பாகச் செய்வித்து, நடராசப் பெருமானுடன் சம்பந்தர், அப்பர், சுந்தரர் ஆகிய மூவரின் திருச்சொரூபங்களையும் வீதியுலா வரவைத்து, குறித்த அறைக்கு முன் வந்ததும் அவரும் வந்துள்ளதால் கதவைத் திறக்குமாறு கோரினார். இக்கோரிக்கையை மறுக்க முடியாது அவர்கள் கதவைத் திறந்தனர். அங்கே தேவாரம் எழுதிய ஏடுகளில் கறையான் புற்று எழும்பியிருந்தது. பெரும்பாலான ஏடுகள் மண்ணாகிக் கிடக்க சிலவே எஞ்சியிருந்தன. அதைக்கண்டு அவர்கள் கவலைப்பட்டனர். அப்பொழுது 'மூவர் பாடல்களிலே இங்கே வேண்டுவன வைத்தோம்' என ஓர் அசரீரி கூறியது கேட்டதனால் மனம் ஆறுதலடைந்தனர்.

மன்னரது வேண்டுகோளுக்கிணங்க தேவாரங்களைத் திருமுறைகளாக நம்பியாண்டார் நம்பி வகுத்தருளினார். இவர் சுந்தரர் பாடிய திருத்தொண்டத் தொகையை அடியொற்றி, அறுபத்து மூன்று நாயன்மாரையும் ஒன்பது தொகையடியாரையும் பற்றி திருத்தொண்டர் திருவந்தாதி பாடியுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எண்பத்தொன்பது கட்டளைக் கலித்துறைகளில் இவ்வந்தாதி அமைந்துள்ளது. சுந்தரமூர்த்தி நாயனார் பற்றி பதினொரு பாடல்களும் திருநாவுக்கரசு நாயனார், திருஞானசம்பந்தப் பெருமான், சேரமான் பெருமாள் நாயனார், கோச்செங்கட்சேவடி நாயனார் ஆகியோர் பற்றி இரண்டிரண்டு பாடல்களும் ஏனையோர் பற்றி ஒவ்வொரு பாடல்களும் பாடப்பட்டுள்ளன. தனியடியார், தொகையடியார் எத்தனை பேரென்பது ஒரு முதற் குறிப்புகள் ஒரு பாடலிலும் நூற்பயன் ஒரு பாடலிலும் பாடப்பட்டுள்ளன.

திருத்தொண்டர் ஒவ்வொருவரின் ஊர், நாடு, மரபு, திருத்தொண்டு, அவர் பெற்றபேறு என்பன அவர் பற்றிய பாடலிலே கூறப்பட்டுள்ளன.

நம்பி தன்னை ஆட்கொண்ட பொல்லாப் பிள்ளையார் மீது திருநாரையூர் விநாயகர் திருஇரட்டை மணிமாலையைப் பாடியுள்ளார். வெண்பா, கட்டளைக்கலித்துறை ஆகிய இருவகைப் பாக்களால் அந்தாதித்தொடை அமையப் பாடப்பட்டதனால் திருஇரட்டை மணிமாலை எனப்பெயர் பெற்றது. வெண்பா, கட்டளைக்கலித்துறை ஆகிய இருவகை மணிகளால் அமைந்த மாலை என்பதே இதன் பொருள்.

கோயில் எனப் போற்றப்பெறுவது தில்லைத் திருச்சிற்றம்பலம். அங்கு ஆடல் புரியும் கூத்தப்பெருமானை இவர் கட்டளைக்கலித்துறை விருத்தப்பாக்களால் பாடியது கோயில் திருப்பண்ணியர் விருத்தமாகும். இது தில்லையில் தேவாரப்பதிகங்களைத் தேடிச் சென்றபோது நம்பியாண்டார் நம்பி பாடியது என்பர்.

திருநாவுக்கரசு நாயனாரின் பெரும்புகழை இவர் பதினொரு பாடல்களில் பாடியுள்ளார். திருநாவுக்கரசுதேவர் திருஏகாதசமாலை என்பது இந்நாலின் பெயர். ஏகாதசம் என்றால் பதினொன்று என்பது கருத்து.

இறைவனை வணங்குவது போன்றதே இறையடியார்களை வணங்குவது மாகும். அந்த வகையிலேயே இவரது பெரும்பாலான பாடல்களும் நூல்களும் அமைந்துள்ளன. அவற்றுள்ளும் மேற்கூறிய திருத்தொண்டர் திருவந்தாதி, திருநாவுக்கரசுதேவர் திருஏகாதசமாலை என்பன தவிர்ந்தவை திருஞானசம்பந்தப் பெருமானைப் போற்றுவனவாகவே உள்ளன.

நம்பியாண்டார் நம்பிகள் அருளிய ஆளுடைய பிள்ளையார் திருவந்தாதி திருஞானசம்பந்தப் பெருமானின் பெருமையைக் கூறுவதாக அந்தாதித் தொடையில் அமைந்துள்ளது. முதலாவது பாடலின் அந்தத்தை அடுத்தபாடல் ஆதியாக-முதலாக-கொண்டு பாடப்படுவது அந்தாதியாகும். இதில் நூறு கட்டளைக் கலித்துறைப் பாடல்கள் பாடப்பட்டுள்ளன. இந்த அந்தாதியின் நூறாவது பாடல்

பிரம புரம்வெங் குருசண்பை
தோணி புகலிகொச்சை
சிரமார் புரம்நற் புறவந்
தராய்காழி வேணுபுரம்

வரமார் பொழில்திரு ஞானசம்
பந்தன் பதிக்குமிக்க
பரமார் கழுமலம் பன்னிரு
நாமம்இப் பாரகத்தே

திருஞானசம்பந்தர் தோன்றிய சீர்காழிபதியின் பிரமபுரம், வெங்குரு, சண்பை, தோணிபுரம், புகலி, கொச்சைவயம், சிரபுரம், புறவம், பூந்தராய், சீகாழி, வேணுபுரம், கழுமலம் ஆகிய பன்னிரண்டு பெயர்களைக் கூறுகின்றது.

இந்தப் பன்னிரண்டு பெயர்களுள் ஒன்றான திருச்சண்பை என்ற பெயரைக் கொண்டதாக ஆளுடையபிள்ளயைார் திருச்சண்பை விருத்தத்தை நம்பி பாடியுள்ளார். கட்டளைக்கலித்துறை, விருத்தப்பாவினால் திருச்சண்பையையும் ஆளுடை பிள்ளையையும் அவர் செய்த அற்புதங்களையும் போற்றிப் பாடுவதாக இது அமைந்துள்ளது. இதில் பதினொரு பாடல்கள் உள்ளன.

ஆளுடைய பிள்ளையின் பெருமையை அகவல், வெண்பா, கட்டளைக் கலித்துறை ஆகிய மூவகைப் பாக்களால் போற்றுவது ஆளுடையபிள்ளையார் திருமும்மணிக்கோவை, இருவகைப் பாக்களால் அமைந்தது இரட்டை மணிமாலை எனப்பட்டது. மூவகைப் பாக்களால் அமைந்தது மூன்றுவகை மணிகளாலான மாலைபோன்றிருப்பதனால் மும்மணிக்கோவை எனப்பட்டது இதில் முப்பது பாடல்களுள்ளன.

ஞானசம்பந்தப்பெருமான் சீகாழியில் திருவுலா வந்த அழகையும் சிறப்பையும் உலாநூல் இயற்றப்படவேண்டிய மரபுப்படி ஒலிவெண்பாவினால் நம்பியாண்டார் நம்பி பாடிய நூல் ஆளுடைய பிள்ளையார் திருவுலா மாலை. இதில் 143 கண்ணிகள் உள்ளன. இந்நூல் பாட்டுடைத் தலைவனை ஆளுடைய பிள்ளையாரே பெரிதும் போற்றுகின்றது ஏழுபருவப் பெண்களது செய்திகள் தனித்தனி பிரித்துக் கூறப்படாது பொதுவாகக் கூறப்பட்டுள்ளன.

கலம்பக வடிவில் திருஞானசம்பந்த நாயனாரைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்டு நம்பி பாடிய நூல் ஆளுடைய பிள்ளையார் திருக்கலம்பகம் ஆகும். இதில் நாற்பத்தொன்பது பாடல்களே இப்போது கிடைத்துள்ளதாகத் தெரிகின்றது.

ஆளுடைய பிள்ளையின் வாழ்வில் நடந்தவை அனைத்தையும் கூறும் வரலாற்றுத் தொகுப்பாகப் பாடப்பட்டது ஆளுடைய பிள்ளையார் திருத்தொகை. அறுபத்தைந்து அடிகளுள் இவ்வரலாறு சுருக்கிப் பாடப்பட்டுள்ளது.

இவையனைத்தையும் படிக்கும்போது நம்பியாண்டார் நம்பி ஆளுடைய பிள்ளையார் மேல் அளப்பரிய பக்தி கொண்டிருந்தது புரிகிறது. இவற்றுள் அகத்திணைப் பாடல்கள் பாடப்பட்டிருப்பினும் அவை பேரின்பத்தையே உட்பொருளாகக் கொண்டு பாடப்பட்டுள்ளன. நம்பியின் பக்தியையும் பரிபக்குவத்தையும் மெய்யறிவையும் பொதிந்து வைத்துள்ள இனிமை மிக்க, புலமையைப் புலப்படுத்தும் அருமையான தமிழ்ப்பாடல்களை அவர் எமக்கு அருளியுள்ளார். அவை பதினோராந் திருமுறையில் அமைந்துள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுவர் விருந்து

# நடுநிலை தவறா நல்லகுணம்

அருட்சகோதரி ஜக்லின்மேரி சிஎஸ்கள்

அன்பான பிள்ளைகளே அன்பு வாழ்த்து.

இன்றைக்கு நடுவு நிலைமை என்ற நல்ல குணம் படைத்த ஒருவரைப் பற்றி உங்களுக்கொரு கதை சொல்லப் போகிறேன். நடுவு நிலைமை என்றால் நண்பர் பகைவர் என்று பாராமல் இருபக்கத்தையும் சமமாகக் கருதி நீதி வழங்கும் உயர்ந்த குணம். இப்படியான குணம் படைத்திருப்பது மிகவும் கடினம். ஆனால் நோய் தீர்க்கும் வைத்தியரும் சோதிடம் சொல்லும் சோதிட நிபுணரும் இந்த நடுவு நிலைமையை நிச்சயமாகக் கடைப்பிடிக்க வேண்டும். அது அவர்களுக்கு உரிய அறம். இதற்கு உதாரணமாக சொல்லக் கூடியவர் தான் சகாதேவன் என்பவர். இவர் பஞ்சபாண்டவர் ஐவரான தருமன், வீமன், அர்ச்சுனன், நகுலன், சகாதேவன் என்போரில் மிக இளையவரான சகாதேவன் தான். இவர் பாண்டு மகாராஜாவுக்கும் அவரது இளைய மனைவியான மாத்திரிதேவி என்பவருக்கும் மகனாகப் பிறந்தவர். அசுவினி தேவர்கள் என்ற தெய்வீக வைத்தியர்களின் அருளால் பிறந்தவர்கள் தான் நகுலனும் சகாதேவனும். சகாதேவன் துரோணரிடம் முறைப்படி எல்லா வித்தைகளையும் கற்றுத் தேர்ந்தவன். சிறப்பாக சோதிடக் கலையில் மிகவும் தேர்ச்சி பெற்றிருந்தான். ஈடு இணையில்லாத சோதிடக் கலைஞனாக சகாதேவனை பெருஞானபண்டிதன் என்று வில்லிபாரதம் பாடிய வில்லிபுத்தூராழ்வார் வியந்து போற்றியிருக்கிறார். அப்படிப்பட்ட சகாதேவனும் தன் தமையன்மாராகிய மற்ற நால்வருடன் அவர்கள் அடைந்த இன்ப துன்பங்கள் வெற்றி தோல்விகள் எல்லாவற்றிலும் பங்கு கொண்டவன். துரியோதனன் முதலிய கௌரவர்கள் அனைவராலும் சகுனியாலும் மிக வெறுக்கப்பட்டவன்.

பாண்டவர்கள் விராட நாட்டிலே மாறு வேடத்தில் ஒளித்து வாழ்ந்த போது சகாதேவனும் தந்திரிபாலன் என்ற பெயரோடு ஆடுமேய்க்கும் இடையனாக வேடம் பூண்டு ஆடு மேய்த்துக் கொண்டிருந்தான். பஞ்சபாண்டவர் 14 வருடம் வனவாசம் செய்து திரும்பிய பின் துரியோதனன் அவர்களுக்கு இருப்பதற்கு இடம் கூட கொடுக்க மறுத்துவிட்டான். கௌரவர்க்கும் பாண்டவர்க்கும் யுத்தம் செய்ய வேண்டிய நெருக்கடி ஏற்பட்டு விட்டது. இந்த நிலையில் துரியோதனன் தருமனைக் கொன்று மற்றைய பாண்டவர்களையும் கொன்றோ அல்லது சிறைப்பிடித்தோ போரிலே முழு வெற்றியீட்டி எதிரிகள் இல்லாமல் செய்து, தானே மீண்டும் அரசனாகி ஆள விரும்பினான். அப்படியான வெற்றியை ஈட்டுவதற்கு தனக்குச் சாதகமாக நாள், நட்சத்திரம் எல்லாம் அமைந்த நாளில் யுத்தத்தைத் தொடங்க அவன் விரும்பினான். அத்தகைய நாளைக் கணித்துச் சொல்லக்கூடிய சிறந்த சோதிடன் சகாதேவன் தான் என்பதும் அவனுக்குத் தெரியும். எனவே துரியோதனன் சகாதேவனைத் தேடிப் போனான். தருமர் போரில் சாக வேண்டும். தனக்கு வெற்றி ஏற்பட வேண்டும். இந்த இரண்டு கருமங்களும் நிறைவேற்றக்கூடிய போருக்குப் பொருத்தமான நாளை குறித்துத் தரும்படி சகாதேவனிடம் துரியோதனன் கேட்டான். சகாதேவன் துரியோதனனின் குரூரமான ஆசையை கண்டு வியப்படையவில்லை. ஏனென்றால் ஏற்கனவே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துரியோதனனைப் பற்றி சகாதேவனுக்கு மிக நன்றாகத் தெரியும் தனது உயிருக்கும் உயிரான தருமன் சாகவேண்டும் என்று துரியோதனன் சொன்னது கேட்டு சகாதேவன் மனதுள்ளே மிக வேதனையடைந்தான். ஆனால் துரியோதனன் தான் வெற்றிபெற நாள் குறித்துத் தரும்படி சோதிடனான தன்னிடம் நம்பி வந்திருக்கிறான் தான் நடுவு நிலைமை தவறாமல் இருக்க வேண்டிய தருணம் இது. எனவே மனம் கவலை கொள்ளக் கூடாது. என்று தன்னைத்தானே அவன் தேற்றிக் கொண்டான். நன்றாக நாளையும் கோளையும் ஆராய்ந்து அடுத்து வரும் அமாவாசை தினத்தில் கொற்றவைக்கு உரிய உயிர்ப்பலி கொடுத்து முறைப்படி யுத்த ஆயத்தத்தைச் செய்து அதனைத் தொடங்குவதற்கு உரிய நேரத்தையும் மிக சரியாகக் கணித்து துரியோதனனுக்குக் கொடுத்து அனுப்பினான்.

பகவான் ஸ்ரீ கிருஷ்ணன் சகாதேவனுடைய இந்த நேர்மையான குணத்தை மிகவும் பாராட்டினார். அவருடைய அருளாலே அமாவாசை நாளை ஒரு நாள் முன்னதாகவே வந்துவிட்டதாக எண்ணி துரியோதனன் கொற்றவைக்கு முதல்க்களப் பலியைக் கொடுத்து விட்டான். மனக் குழப்பத்தினால் சகாதேவன் குறித்துக் கொடுத்த மிகச் சரியான நேரத்தை விட சற்று முன்னதாகவே யுத்தத்தையும் துரியோதனன் தொடங்கி விட்டான்.

'தர்மமே வெல்லும்' என்ற நியதிப்படி பஞ்ச பாண்டவருக்கே வெற்றி கிடைத்தது. என்றாலும் சகாதேவனுடைய நடுவு நிலைமை என்ற நல்ல குணம் அவனை மிக உயர்ந்த நிலையில் வைத்துப் போற்றும்படி அமைந்தது.

## போற்றும் நூற்றெட்டு நாமம்

அருங்கயிலை உச்சியான் அகத்தாய் போற்றி
அருளிமவான் குலவிளக்காம் அன்னாய் போற்றி
கருங்களத்தர் உருப்பாதி அழகீ போற்றி
கருதுமர கதக்கொடிபோல் வடிவாய் போற்றி
விருந்திளாதி சயத்தணியார் எழிலாய் போற்றி
விதுமுடியோன் பிராணவல் லபியே போற்றி
அரும்பஞ்ச தசாக்கரியின் வித்தே போற்றி
ஆமணிமா ணிக்கவளை முடியாய் போற்றி

சரமலரும் தனுக்கரும்புந் தரிப்பாய்! போற்றி
சத்திளமை எழிலார்மங் கலையே! போற்றி
பரசிவன்சேர் பரமேச்சு வரியே! போற்றி
பகர்தத்வம் அறுநான்கின் படியாய் போற்றி
கரமலர்கொண் டடிசாத்தச் சிரமுன் தாழ்த்திக்
கருத்திருத்திக் காதலித்துன் நாமம் போற்றும்
இரவலரெம் இதயவொளி விளக்காய் என்றும்
இருந்தருள்வாய் தெல்லியுறை துர்க்கை அன்னே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பட்டீஸ்வரம் ஸ்ரீ துர்க்காதேவி

தெய்வப் பசுவான காமதேனு அமைத்த சிவாலயம் ஸ்ரீ தேனுபுரீஸ்வரர் திருக்கோயில். இது கும்பகோணத்துக்கு அருகே உள்ள பட்டீஸ்வரம் என்ற தலத்தில் அமைந்துள்ளது. காமதேனுவின் புதல்வி பட்டி, அந்தப் பட்டி வழிபட்டு அருள்பெற்ற இடமே பட்டீஸ்வரம். சோழர்களின் தலைநகரமான பழையாறையின் ஒரு பகுதியே பட்டீஸ்வரம். இந்தப் பட்டீஸ்வரம் தேனுபுரீசர் தாம் தமிழ் ஞானசம்பந்தப் பெருமானுக்கு முத்துப்பந்தர் அருளியவர். சம்பந்தக் குழந்தை பாடிப்பாடி நடந்து வரும் அழகைப் பார்க்கவென சந்நிதியில் இருந்த நந்தியை விலகும் படி ஈசன் கட்டளை இட, அந்த நந்தியும் விலகி உள்ளது. விசுவாமித்திர முனிவர் மகரிஷிப் பதவி பெற்ற இடம் பட்டீஸ்வரம். வாலியைக் கொன்ற பாவம் தீர ஸ்ரீராமன் வந்து வணங்கிய பெருமான் பட்டீஸ்வரம் தேனுபுரீசர் தலம். இந்தத் தேனுபுரீசர் ஆலய வடக்கு வாசலில் மிக அற்புத மங்கள வடிவாக அட்டபுஜ துர்க்காதேவி தனிச்சந்நிதி கொண்டிருக்கிறாள். சோழ மன்னர்களின் குலதெய்வம் ராஜராஜனின் சகோதரியும், மதி மந்திரியுமான குந்தவைப் பிராட்டியும், மதுரையிலே சைவ நெறியை ஆட்சிபீடத்தில் ஏற்றிய மானி என்ற மங்கையர்க்கரசியும் வழிபட்டு அருள் பெற்றது இதே துர்க்கையிடமே.

16ஆம் நூற்றாண்டில் தஞ்சையை ஆண்ட நாயக்கமன்னர்கள் ஆளத்தொடங்கிய போது முதல் அரசனான சேவப்பாவுக்கு முதன் மந்திரியாகவும், அவரை அடுத்து அடுத்து வந்த மூன்று தலைமுறை மன்னர்களுக்கும் முதல் அமைச்சராக 75 ஆண்டுகள் பதவி வகித்தவர். மகான் கோவிந்த தீட்சிதர். இவரது இரண்டாவது புதல்வர் தான் வேங்கடமஹி என்று பேர் பெற்ற வெங்கடேஸ்வர தீட்சிதர். கர்நாடக சங்கீதத்தில் நிபுணரான வேங்கடமஹி கர்நாடக சங்கீதத்தில் 72 மேளகர்த்தா இராகங்களை முறைப்படுத்தி வகுத்தவர். இவரது இராக சம்பிரதாயங்களைப் பின்பற்றியே ஸ்ரீ தியாகராஜசுவாமிகளும் ஸ்ரீ முத்துசுவாமி தீட்சிதரும் கீர்த்தனைகளை இயற்றினார்கள். இத்தகைய புகழ்பெற்ற வேங்கடமஹி என்ற வெங்கடேசுவர தீட்சிதர் இந்தப் பட்டீஸ்வரத்தில் வாழ்ந்தவர். துர்க்கையை வணங்கியவர். இதே பரம்பரையில் வந்தவர்தாம் காஞ்சியில் ஞான ஒளிபரப்பி மறைந்த மகா பெரியவர் ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சுவாமிகள். ஸ்ரீசரணர் என அனைவராலும் வணங்கப்பட்ட பெரியவரின் அத்யந்த பக்திக்கு உரியவளானவள் பட்டீஸ்வரம் ஸ்ரீ துர்க்கை.

வலப்புறம் மேலிருந்து கீழாக சக்கரம், அம்பு, வாள், அபயம் ஆகவும், இடப்புறம் மேலிருந்து கீழா சங்கு, வில், கேடகம், தொடையில் ஒய்யாரமாக வைத்துள்ள கரத்தின் புறத்தில் கிளியொன்று உல்லாசமாக உட்கார்ந்திருப்பது கண்ணுக்கினிய காட்சி. ஆறு அடி உயரம் உள்ளவளாக, மூன்று கண்களுடன் உயர்ந்த மகுடம் தரித்து நிற்கும் பட்டீஸ்வரம் துர்க்கா சாந்த சொரூபிணியாகத் திகழ்கிறாள். அவளுக்குப் பின்னால் இடது பக்கத்தை நோக்கியவாறு சிம்மவாகனம் தலைதாழ்த்தி நிற்கிறது. காலின்கீழ் மகிடனின் தலை-அதுகூட மகிழ்ச்சிப் பாவனையில் நாக்கினை மேல்நோக்கி நீட்டி மூக்கை வருடிக் கொண்டிருக்கிறது. வலது பாதத்தை எடுத்து நம்மைக் காக்கவர ஆயத்தமாக நிற்கும் பட்டீஸ்வரம் துர்க்கையைப் பணிவோமாக!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாடகம்:

# தபோபலம்

திரு. சிவ. சண்முகவடிவேல் அவர்கள்

காட்சி: 3

இடம்: ஆச்சிரமத்தில் ஒரு பிரிவு

வசிட்: அரசே! எமது ஆச்சிரம பழக்க வழக்கங்களை நன்கு அவதானித்திருப்பீர்கள்...... வேர், கிழங்கு, காய், கனிகளால் அடியேன் அதிதி பூசை புரிவேன் அரசராக இருந்தாலும் ஆச்சிரம அரவணைப்பை அன்போடு ஆதரிக்க வேண்டும்.

விசுவா: அன்பே பூசை, அன்பே அதிதி உபசரணை அன்பில் மலர்ந்த ஆச்சிரமம்! என்றும் விரும்புவது இன்ப அன்பு ஒன்றே!!

வசிட்: அரசரின் கருணைப் பெருக்கு ஆச்சிரமம் எங்கும் கரை புரள்கிறது! மனவளம் நிறைந்த மன்னரை அடைய நாடும் நகரமும் நலியாத தவத்தைப் புரிந்திருக்க வேண்டும்.

விசுவா: வசிட்டரின் பூசை வரப்பிரசாதத்தை வரவேற்றுக் கொண்டேன்

வசிட்: தவமுனிவருக்கான தயாள குணம் பேசுகின்றது!

விசுவா: வசிட்டரே! என்னால் நிறைவு செய்யத் தக்க குறை யாதும் உளதோ?

வசிட்: விசுவாமித்திர அரசர் ஆணைக்குக் கீழ் ஆச்சிரமம் அமைதியாக நடந்து வருகின்றது..... அது நாம் புரிந்த நல்ல தவப்பேறு!

விசுவா: தங்களைக் குருவாக வரித்த சீடர்கள் வாழ்க்கை நலத்தில் குறைபாடு உளவோ?

வசிட்: சீடர்களும் சிறப்போடு சீவிக்கின்றார்கள்! நான் மனத்தில் எதை நினைக்கின் றேனோ அதனையே செயலில் காட்டும் தீரர்களாகத் திகழுகின்றார்கள்... அடக்கம், பணிவு, ஒழுக்கம், நேர்மை அவர்களிடத்தில் நிரம்ப உண்டு. மணிகளுக்குள் எல்லாம் மேலான மாணவ மணிகளாக அணி செய்கின்றார்கள், அரசே!

விசுவா: ஆச்சிரம அரும் பணி?

வசிட்: மன்னருக்கு மாளிகை வாழ்வு போல எமக்கு ஆச்சிரம ஆடம்பரமின்மை மேலான சுகத்தைக் கொடுத்த வண்ணமாக அமைகின்றது!

விசுவா: வன விலங்குகள்?

வசிட்: இனம் கண்டு இயலுவன, இயல்பாகவே கொடிய கொல்லுஞ் சுபாவமுள்ள விலங்குகள் ஆனாலுஞ் சரி இயல்பாகவே சாதுவான உணர்வுடைய விலங்குளா யினுஞ் சரி! தயை புரியத் தயங்குவதில்லை.

விசுவா: விலங்குகள் யாவும் மகிழ்வாகவும் குதூகலமாகவும் இருப்பதைக் கண்கொண்டு காண்கின்றேன். செவியினால் அவற்றினுடைய செப்புதலைக் கேட்கின்றேன்! என் மனம் அவற்றினுடன் நன்கு கலக்கின்றது!

வசிட்: அரசருடைய அருள் உரை கேட்டு என் அகம் பூரிக்கின்றது! அரசரின் நலம் குறித்து நானும் அறிவதில் ஆவல் கொண்டுள்ளேன்!!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**விசுவா:** முனிவர் அறிய விரும்புவதை அறியத் தருவதில் நானும் ஆயத்தமாக உள்ளேன்!

**வசிட்:** மகாராசா! தாங்கள் சேமமாக இருக்கின்றீர்களா?

**விசுவா:** நன்றே நாடினீர்கள்! நமக்கு ஏது குறை நம் குடிகள் நிறைவுடன் வாழ்கின்றார்கள். துன்பம் என்றால் இன்னது என்று அறிய மாட்டார்கள். யாதும் எம் ஊர் யாவரும் இனிய உறவினர் போல்வார்!

**வசிட்:** சகசமூகங்களைத் தருமமாக ஆண்டு வருகின்றீர்களா?

**விசுவா:** வசிட்ட முனிவரே! தருமம் எங்கும் தாண்டவம் புரிகின்றது! நம் சமூகம் அதர்மம் என்றால் என்ன என்று அறியமாட்டார்கள்...!

**வசிட்:** அரசருடைய வார்த்தைகள் ஆனந்தமாகவுள்ளது! அரசே! ராச நீதி தவறாமல் குடிகளைத் தரும நெறியில் நின்று கட்டிக் கொள்கின்றீர்களா?

**விசுவா:** மகரிஷியே! நமது நாட்டில் செல்வம் செழித்துக் கொழிக்கின்றது என்றால் அறம் திறம்பாமல் ஓங்குகின்றது என்று தானே பொருள் தரும்.

**வசிட்:** அது போற்றுதற்குரியது! வேலையாட்கள் விசனப்படாமல் கடமையைக் கவனிக்கின்றார்களா?

**விசுவா:** அவர்களை நெறிப்படுத்த வேண்டிய நிர்ப்பந்தம் நமக்கு நிகழ்வதில்லை முனிவரே! வேலையாட்கள் அவர்கள் தாமாகவே நன்னெறி நாடி நடப்பார்கள்..!

**வசிட்:** பகைவர்களை வெற்றி கொண்டீர்களா?

**விசுவா:** எல்லோரும் நண்பர்களானதால் பகைமை என்ற வார்த்தை நமது அரசியல் அகராதியில் இடம் பெறுவதில்லை.

**வசிட்:** அரசே! சேனை சமூகம்...?

**விசுவா:** சேமத்தோடு செயல்படுகின்றார்கள்..!

**வசிட்:** நண்பர்கள்?

**விசுவா:** நலமாக வாழ்ந்து வருகின்றார்கள்...!

**வசிட்:** புத்திர சந்தானம்

**விசுவா:** மாதா பிதா குரு தெய்வ சார்பன்றிப் பிறிது ஓர் சார்பில்லார்கள்...!!

**வசிட்:** அரசே! பௌத்திரர்கள்?

**விசுவா:** சொல்லவா வேண்டும் முனிவரே! அவர்கள் இட்டம் போல் குதூகலத்திற்கும் கொண்டாட்டத்திற்கும் குறைவே இல்லை.

**வசிட்:** பந்துக்கள்

**விசுவா:** பல துறைகளிலும் புகழோடு பொலிகின்றார்கள்!

**வசிட்:** பரிசனர்கள் பார்த்திபரே?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**விசுவா:** குறைவிலா நிறைவில் நிலைத்துள்ளார்கள்!

**வசிட்:** அரசே! தாங்கள் உண்மையில் புண்ணியம் புரிந்தவரே! தங்கள் தகுதியான இருக்கை என்னைத் தலை வணங்க வைக்கின்றது!

**விசுவா:** மகரிஷியே!! தங்களைப் போன்ற தவமுனிவர்களுடைய தயவு இருக்கும் போது தரணியாளும் இந்த விசுவாமித்திரனுக்கு தாழ்வு தளர்வு ஏது?

**வசிட்:** அரசர் உத்தம குணம் ஓங்கப் பெற்றவர் வருணாச்சிரம தருமம் வழி தவறாமல் வரம்பாக நிற்கின்றீர்கள். எங்களைப் பாதுகாப்பவர் தருமத்தை நடத்தும் தனி அரசர்!!

**விசுவா:** முனிவர் அளவு கடந்த புகழ் மாலையை அள்ளி அணிகின்றார்...!

**வசிட்:** அப்படி அல்ல அரசே!! தாங்கள் என் இருப்பிடம் நாடி வந்த நல்ல அதிதி, என்னுடைய உயிருக்கு உயிரான உத்தம நண்பருமாவார். நான் தங்களைத் தாழ்ந்து பூசிப்பதற்குத் தகுந்த காரணம் பல உள.

**விசுவா:** முனிவருடைய கனிந்த மொழிகளில் பொய் கலவாத பொருத்தமான மெய் மிளிருகின்றது!!

**வசிட்:** அரசே! தங்களுக்கும் சேனைக்கும் தகுந்த படி அதிதி பூசை அளிப்பதற்கு ஆசை கொண்டுள்ளேன். என் எண்ணம் நிறைவேறுவது தங்கள் வண்ணம். நான் செய்யப்போகும் உபசாரத்தை அங்கீகரிப்பீர்கள் என்று நம்புகின்றேன்.

**விசுவா:** மகரிஷியே! தாங்கள் இது வரையில் பால் பழம் கிழங்கு வேர் காய் இவற்றால் அர்ச்சித்தீர்கள்...!

**வசிட்:** ஆம் அரசே! ஆனாலும் அது எனக்கு மன அமைதி அளிக்கவில்லை.

**விசுவா:** அர்க்கியம், பாத்தியம், ஆசமனியம் உபசாரம் உவந்து செய்தீர்கள். ஆச்சிரம வாழ்க்கையில் அதுவே சிரமம்...!

**வசிட்:** அரசே! அதனால் என் மனம் சாந்தி கொள்ளவில்லை.

**விசுவா:** முனிவருடைய உபசாரம் என் மனத்திற்கு முழுமையான நிறைவைத் தந்தது.

**வசிட்:** என் உள்ளே ஒன்று இருந்து என்னை உந்திக் கொண்டே வருகின்றது!

**விசுவா:** எல்லா உலகங்களும் போற்றும் தகுதி நிறைந்த தாங்கள் என்னையும் ஒரு பொருளாக மதித்து மதிப்பளித்தது போதாதா?

**வசிட்:** போதும் என்னும் நிறைவு எல்லோருடைய உள்ளங்களிலும் உறையாது!

**விசுவா:** பெரும் புண்ணியச் செயல்களின் பலனாகத் தங்களுடைய தரிசனம் எனக்குக் கிடைத்தது. அதை விட நான் எதையும் தங்களிடத்தில் எதிர்பார்க்கவில்லை. முனிவரை முழுமனதுடன் வணங்குகின்றேன். அனுமதி அளித்து நான் ஏகுவதற்கு விடை புரிய வேண்டும்.

**வசிட்:** மன்னவருக்கு மாறாக நான் மாற்று வார்த்தை கூறவில்லை. அடியேனுடைய மன அமைதிக்காக அடியேன் அளிக்கும் அதிதி அருச்சனையை அங்கீகரித்தே ஆக வேண்டும் அரசே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விசுவா: மகரிஷியின் மனங் குழம்ப நான் மறுத்துரைக்க மாட்டேன். வசிட்ட முனிவருடைய வழி நடத்தலை ஏற்றுக்கொள்ள என்றும் நான் தயங்க மாட்டேன்.

வசிட்: அரசருடைய உடன்பாட்டிற்கு என் உளங்கனிந்த வந்தனங்கள் உரித்தாகட்டும்!!

**(திரை)**

**காட்சி: 4**
**இடம்: ஆச்சிரமத்தில் உணவு தயாரிக்கும் மண்டபம்**

வசிட்: சபலே... சபலே...!

சப: மகரிஷி... இதோ... வருகின்றேன்...

வசிட்: பெண்ணே...! அரச விருந்தினரை அதிக நேரம் காக்க வைத்தலாகாது... விரைந்து வருவாய்...

சப: (வந்து வணங்கி,) வந்தேன் வசிட்ட முனிவரே! எனது வந்தனத்தைப் பாதத்தில் தந்து நிற்பேன்.

வசிட்: ஆகட்டும் சபலை.. இதைக் கேட்பாய்... நமது ஆச்சிரமத்தை அறிய வந்திருக்கும் அரச ரிஷிக்கும் அவர் உடன் உறையும் சேனைக்கும் விருந்து செய்ய விரும்புகின்றேன்.

சப: ஆகா! முனிவருடைய விருப்பத்தை முன்னின்று முடிப்பது அல்லால் பின் ஒன்று உளதோ பேதைக்கு!

வசிட்: சபலையே! எந்த விருந்தாளிக்கு எதில் விருப்பம் அதிகம் உளதோ அவருக்கு அதை அள்ளி வழங்குவதற்குக் குறைவில்லாமல் தயார் பண்ணிக்கொள்...

சப: அவ்வாறே ஆக்கிக் கொள்வேன் முனிவரே! அன்னம்...?

வசிட்: அதுவே விருந்தில் அதிகம் விரும்பத் தக்கது...அதற்கான கறி வர்க்கங்கள்....!

சப: அமைத்துக் கொள்வேன்... வேறு என்ன வேண்டும்?

வசிட்: பலகார வகைகள்...?

சப: விருந்தினர்கள் விரும்பி உண்பார்கள்... வேண்டாம் என்னும் வரை விநியோகிக்க வேண்டும்

வசிட்: ஆம்....

சப: வேறு என்ன விரும்புகின்றீர்கள்?

வசிட்: பான வகை?

சப: அது பலவிதம்.. குளிர்பானம்... கரும்பானம்.... பழரசபானம்... ஆகட்டும்...

வசிட்: ரச வகை....?

சப: தயார் செய்வோம்! அறுசுவைப் பதார்த்தங்கள்!

வசிட்: ஆம், கடித்துத் தின்பன...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சப: மென்று உண்பன...

வசிட்: முறுக்கு வகைகள்

சப: பருகத் தக்கன

வசிட்: நக்கிச் சுவைப்பன...

சப: தேன்...... வெல்லப்பாகு........ பழரசங்கள்....

வசிட்: வெல்லம்....

சப: பால்....

வசிட்: கட்டித் தயிர்....

சப: நறுமணம் கமழும் நெய்....

வசிட்: பொரியல் வகைகள்....

சப: வாசனை மிக்க திரவியங்கள்

வசிட்: பூக்கள்

சப: பூச்சுக்கள்...!

வசிட்: தாம்பூலம்...!

சப: சந்தனம்...

வசிட்: யாவும் தடங்கல் இல்லாமல் தாராளமாகத் தயாராக இருக்கவேண்டும், விளம்ப முன்பு வழங்க வேண்டும்.

சப: வசிட்ட முனிவரே! விருந்தினர்கள் விரும்பியவற்றை இல்லை என்னாது சொல்லு முன் வல்லவாறு வழங்குவிப்பேன்...!

வசிட்: ஆகா! நான் உன்னை நன்கு உணர்வேன்! நீ என் சத்தியுள்ள காமதேனு அல்லவா...!

சப: முனிவரே, அஞ்சற்க! தாங்கள் பிரமாவின் தனயர், புண்ணிய நதியாவீர்கள்!! தவத்தில் தன்னிகர் அற்றவர். ஒளி உள்ளவர்... தாங்கள் மந்திரங்களுக்கு உற்பத்தி இடம் அல்லவோ...! தங்கள் உத்தரவைத் தவிர்ப்பேனோ...!

வசிட்: ஆகா! எல்லாம் அறிந்த காமதேனுவிற்கு கற்பிக்க நான் யாவன்...!

**(திரை)**

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சக்தி வழிபாடு

செல்வி ச. நிரஞ்சலா அவர்கள்
யா/ஸ்கந்தவரோதயக் கல்லூரி

தாய் வழி பிறப்பன உயிர்கள். அவற்றினைப் பெற்றுத் தந்தவள் அன்னை. உயிர்கள் மட்டுமல்ல உலகம் கண்ணுக்கெட்டாத அண்டம் வரை அனைத்தையும் பெற்றுத்தந்தவள் அன்னை. இதனைவிட கடல் வானுயர் மலைகள், மணக்கும் மலர்கள், எழில்மிகு பறவைகள் இப்படியாக அனைத்தின் தோற்றத்திற்கும் காரணமாக அமைபவள் இந்த அன்னையே. அளவற்ற அன்பு, எல்லையற்ற கருணை, இடையீடு அற்ற இயக்கம் இவை அனைவற்றிற்கும் சக்தியின் பரம் பொருளே ஆகும்.

இந்த அன்னையின் வழிபாடே சக்தி வழிபாடு. அறிவு நிலை சிவன் எனின் இயக்க நிலை சக்தியாகும். சிவமும் சக்தியும் வேறு வேறல்ல நிலவும் மதியும் போல, தீயும் வெப்பமும் போல சிவமும் சக்தியும் வேறறக் கலந்து நிற்பவர்கள்

"சத்தன் அருள் தரின்
சக்தி அருள் உண்டாம்"

என்று திருமூலர் குறிப்பிட்டுள்ளார். சிவன் தந்தை எனின் சக்தி தாய் இப்படி இணைத்து வழிபடுதல் மரபு

"தாயாகி எம்மை வளர்த்தனை போற்றி"

என மாணிக்கவாசகரும் "எந்நாளுமாய் எனக் கெந்தையுமாய் தாயானைத் தவமான தன்மையானை" என அப்பரும் சக்தியும் சிவனும் இணைந்த மரபைப் போற்றுகின்றார்.

சிந்துச் சமவெளியில் ஆராட்சிகளின் போது சக்தி வழிபாடு பற்றி அறியமுடிகிறது. இதிலிருந்து இற்றைக்கு ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு சக்தி வழிபாட்டின் சிறப்பினை அறிய முடிகிறது. இருக்கு வேதத்தில் சக்தி வழிபாடு நிகழ்ந்தமையை "தேவிசூக்தம்" எனும் பகுதியில் உஷை, இராத்ரி, அதிதி, வாருணி ஆகிய பெண் தெய்வங்களின் குறிப்புகள் உண்டு. இதிலிருந்து பல பெயர்களால் சக்தி அழைக்கப்பட்டமையைப் பெறலாம். சக்தியை பல்வேறு வடிவங்களில் போற்றுகின்றனர். காளி, மாரியம்மன், வழிபாடு இதனை விட உலக நாயகி வழிபாடு இன்றும் காணப்படுகிறது.

அன்னை பராசக்தி அவளே ஆதிசக்தி. அவளது அருளால் உலகில் நன்மைகள் நிகழ்கின்றன. நோய் தீர்ப்பாள் தனம் நல்ல மனம் இவற்றையெல்லாம் அருள்பவள் அன்னை ஆதிசக்தி. சக்தி சிவன் பரஸ்பர வழிபாடு பற்றி பல அறிஞர்கள் கருத்துரை பகிர்கின்றனர்.

**சக்தியின் அருள்**

தம்மை உருக்கி உள்ளம் ஒருமைப்பட்டு அன்னையை நெஞ்சில் நிறுத்தி வழிபடும் அடியவர்கள் அன்னையின் அருளைப் பெறுவர். எவர் எவர் எதை எதை உள்ளம் நெக்கி உருகி வழிபடுபவர் எவராயினும் அவரவர் சக்தியின் அருளைப் பெறுவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சம்பந்தர் சீர்காழியில் 'அம்மா' என்று அழைத்த குரல் கேட்டு அன்னை இரங்கினார். ஆதி சங்கரர் 'சௌந்தர்ய லகரியில்' "பார்வதி அம்மையே உன் பாலை அருந்திய திராவிடக் குழந்தை பெரும் புலவரிடை எல்லோரும் கவரக் கூடிய கவி ஆகி விட்டார் என்று கூறுகிறார். இற்றைக்கு 1500 ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த சீகர் என்பவர் பிறவியிலே ஊமை. சக்தி அருள் பெற்றார் பேசும் திறனால் 'ஸ்ரீ முகபஞ்ச துதி' எனும் பாடலை சக்தி நோக்கிப்பாடினார். 300 ஆண்டுகளுக்கு முன் திருக்கடவூரில் அபிராமிப்பட்டர், அன்னையிடம் மிகுந்த அன்புடையவர். அன்பின் முதிர்வு பக்தியாகும். இதனால் 'சரபோஜி' மன்னரிடமிருந்து சக்தியால் காக்கப்பட்டு "அபிராமி அந்தாதியைப் பாடினார்."

மேற் கூறப்பட்டவர்கள் சக்தி அருள் பெற்றவர்களாவர். நாமும் அன்னையை பக்தியால் வழிபட்டால் நிச்சயம் காக்கப்படுவோம். இன்று பக்தி முறைகள் மிகவும் அருகியே விட்டன. இதனால் இன்று துன்பமும், மரண ஓலங்களும் நிறைந்து விட்டன. இதற்கு எல்லாம் நாம் அன்னையை போற்றல் வேண்டும். அவள் தாய் எம் பிழைகளை நிச்சியம் பொறுப்பாள். எதிர்வரும் தினங்களில் தெல்லிநகர் துர்க்கை அம்மன் தேரில் ஏறிப் பவனி வந்து எம்மை காப்பாள். எம்மிடமுள்ள தீய குணங்களை சங்கரிப்பாள். துர்க்கையை வழிபடுவது கத்தி முனையில் நடப்பது போல் மிகவும் அவதானமானது. போலி அன்புகள் எவையும் ஈடேறமாட்டாது. உலகம் அமைதி பெவேண்டும் நாடு அமைதி பெறவேண்டும் எனவே அன்னையிடம் நாம் மன்றாடுவோம். கண்ணீரால் பாத பூஜை செய்து விமோஷணம் பெறுவோம்.

"எல்லோரும் பெறுக அருள்"

*** *** ***

## தேரேறி வந்திடுவாய் தெல்லிநகர் துர்க்கையம்மா

அமைதியற்ற நாட்டிலே அமைதியாய் வாழ்ந்திட
அருகதியற்ற வாழ்வை அருமருந்தாக்கிட
பண்பற்ற மாந்தரிற்கு பக்குவத்தை தந்திட
தேரேறி வந்திடுவாய் தெல்லிநகர் துர்க்கையம்மா

நகையும் ஊழ்வினையும் பகையையும் துரத்த
பாவமும் ஏழ்மையும் பிணியும் பசியும் போக்க
தாரமா் கொன்றையும் இலுப்பம் பூவுந் தாங்கி
திருத் தேரேறி வந்திடுவாய் தெல்லிநகர் துர்க்கையம்மா

மோகத்தைக் கொன்று மூச்சை நிறுத்தி
தேகத்தைச் சாய்த்து தேசத்தைக் காத்து
யோகத்தை திருத்தி ஊனை உருக்கி
காக்க தேரேறி வந்திடுவாய் தெல்லிநகர் துர்க்கையம்மா

காலை இளவெயிலில் அம்மா
கண்ஒளி காட்டும் மாட்சி தாயே
நீல விசும்பிடை அன்னை உன்
திருவீதி வலம் வரும் உன் அருளாட்சி

ச. தக்கசீலா
யா/ஸ்கந்தவரோதயாக் கல்லூரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேர் மகிமை

தெல்லிப்பழை துர்க்கை அம்மன் ஆலயத்துக்குப் புதிய தேர் அமைக்கப் படுகின்றதெனவும், அதன் வெள்ளோட்டத்தையொட்டி, மலரொன்று வெளியிடப்படுகின்றதெனவும் அறிந்து மகிழ்ச்சியடைகின்றேன். தேரைப்பற்றிச் சிந்திக்கத் தொடங்கியதும் மனத்திலே பல கருத்துக்கள் எழுகின்றன. அவற்றுள் மூன்றை மட்டும் இங்கு மிகச் சுருக்கமாகக் குறிப்பிடுவோம். முதலாவது அழகையொட்டியது. இரண்டாவது சமய தத்துவம் பற்றியது. மூன்றாவது சமூக தத்துவத்தைப் பற்றியது.

அழகு:

ஆலயங்களிலேயுள்ள அம்சங்களுள் தூரத்திலுள்ளவர்களைக் கூடக் கவரவல்லன எனக் கருதத்தக்கன கோபுரமும் தேருமேயாகும். இவற்றுள்ளும் தேருக்குச் சில தனிச் சிறப்புகளுண்டு. கோபுரம் ஓரிடத்திலேயே நிலைத்து நிற்பது. தேர் ஆண்டுக்கொரு முறை, தானும் அலங்கரிக்கப்பட்டு அலங்கரிக்கப்பட்ட இறைவனையோ அம்பாளையோ தாங்கி வீதி வலம் வருவது. எந்த ஆலயத்திலும் தேர்த் திருவிழாவுக்கு ஒரு தனி மகிமையுண்டு. தேரிலே சுவாமியோ அம்பாளோ வீதி வலம் வருவது தனி அழகெனக் கூறுவது மிகையாகாது. நல்லூரிலே ஆறுமுகப்பெருமான் தேரில் இருந்து வீதிவலம் வரும் காட்சியை அழகுக்கெல்லாம் அழகென்று கூடக் கூறலாம். அந்தக் காட்சியைக் காணும் வாய்ப்பினைப் பெற்ற எவரும் வைத்த கண் எடுக்க விரும்புவதுமில்லை, பார்த்தது போதும் என மனம் நிறைந்து திரும்புவதுமில்லை. அத்தகைய கவர்ச்சியுண்டு அத்தேருக்கும் அத்தேரில் எழுந்தருளி வீதிவலம் வரும் ஆறுமுகப் பெருமானுக்கும்.

சமய தத்துவம்:

இனி, தேர்த்திருவிழா குறிக்கும் அடிப்படைச் சமய தத்துவத்தை நோக்குவோம். மேலே தேரின் அழகைக் குறிப்பிட்டோம். ஆனால் தேர் குறிக்கும் தத்துவம் சங்காரமாகும். இது வியப்புக்குரியது. மகோற்சவத்தை விளக்கும் நூல்கள் யாவும் இரதோற்சவத்தின் உட்கருத்தையும் விளக்கியிருக்கின்றன. "ஞானியார் அடிகள் நினைவுமலர்" என்ற நூலிலே "தேரூர்ந்த திரிபுராந்தகன்" என்றொரு கட்டுரையிலே சிருஷ்டி, திதியைக் காட்டிலும் சம்ஹாரமே மேலானது என்றும், சம்ஹாரத் தொழில் கொலைத் தொழில் அன்று என்றும் கூறப்பட்டுள்ளது.

பூமியையே ஆண்டவன் இரதமாகக் கொண்டிருக்கிறான். நான்கு வேதங்களுமே இரதத்தில் கட்டப்பட்ட நான்கு குதிரைகளாகின்றன எனத் தைத்திரியோபநிடதம் கூறுகின்றது. பிரமனே இந்த இரதத்துக்குச் சாரதி. பூமியாகிய இந்த இரதத்துக்குச் சக்கரங்களாக அமைந்தவர் சூரிய சந்திரர். சூரியன் அசுத்தத்தைப் போக்குவது. சந்திரன் இன்பத்தை உண்டாக்குவது. ஆணவம், கன்மம், மாயை ஆகிய மும்மலங்களையும் அழிப்பதற்காகவே தேரூர்ந்து செல்கின்றான் என்பதே இரதோற்சவத்தின் உட்கருத்து என்பதைப் பல நூல்களும் விபரமாக விளக்கியிருக்கின்றன.

சமூகத் தத்துவம்:

நான் சிறுவனாயிருந்த காலத்தில் என்னை என் தகப்பனார் மாவிட்டபுரம் தேருக்கு ஒவ்வொரு வருடமும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தவறாது அழைத்துச் செல்வது வழக்கம். தேர் புறப்படும்போது என் தகப்பனார் தானும் தேர் வடத்தைப் பிடித்துத் தேரை இழுப்பார். அதுமட்டுமன்றி ஒரு சிறிது தூரமாவது எல்லோருடனும் சேர்ந்து நானும் தேரை இழுக்க வேண்டுமென விரும்பி என்னையும் வடத்தைப் பிடித்து இழுக்கச் செய்வார்.

சமய உட்கருத்துக்கள் எவையாயிருப்பினும் தேர்த்திருவிழாவைப் பொறுத்தமட்டில் வெளிப்படையான சில சமூக நலன்கள் இருப்பதையும் காண்கின்றோம். அவற்றுள் இரண்டொன்றை இங்கு குறிப்பிடுவோம். தேர் வடத்தை எல்லோரும் சேர்ந்து இழுக்கும்போது இறைவன் சந்நிதியில் ஏற்றத் தாழ்வின்றி எல்லோரும் சமம் என்ற உணர்வு ஏற்படுகின்றது. இது வரவேற்கத் தக்கது. பெண்கள் வடத்தைத் தொட்டுத் தேரை இழுக்கக் கூடாதென்ற ஒரு கருத்து ஒரு காலத்தில் நிலவி வந்தது. ஆயினும் அக்கருத்து காலப்போக்கில் வலியிழந்துவிட்டது. இன்று சில ஆலயங்களிலே அம்பாள் உற்சவங்களில் முழுதும் பெண்களே தேரை இழுக்கும் நிலைமையும் நிலவி வருகின்றது. புதியதேர் இயற்றப்படுவதும் ஓர் அம்பாள் ஆலயத்திலானமையால் இக்கருத்தை இங்கு குறிப்பிடலானோம்.

பலரும் சேர்ந்து வடத்தை இழுக்கும் போதே தேர் நகருகின்றது. இதன் மூலம் கூட்டு முயற்சியின் முக்கியத்துவம் புலனாகின்றது.

தேர் வடத்தைப் பிடித்து இழுக்கும் ஒவ்வொருவருக்கும் தற்பெருமையோ தன் நினைப்போ இன்றி தன்னை மறந்து இறைபணி செய்யக்கூடிய மனோநிலை ஏற்படுகின்றது. இவை போன்ற யாவும் இரதோற்சவத்தின் மூலம் ஏற்படக்கூடிய பலவித நலன்களுக்கு உதாரணங்களாகும்.

இன்றுள்ள அமைதியற்ற நிலைமை நீங்கவும், நாடெங்கணும் அமைதியும் நன்மையும் நிலவவும் அருளுமாறு புதிய தேரிலே எழுந்தருளி வீதிவலம் வரும் எல்லாம் வல்ல துர்க்காதேவியின் திருவருளை வேண்டுவோமாக.

பிரம்மஸ்ரீ கி. லக்ஷ்மணஐயர்
வித்தியாதிபதி, கல்வி அமைச்சு.

பொருந்திய முப்புரை செப்புரை செய்யும் புணர்முலையாள்
வருந்திய வஞ்சி மருங்குன் மனோன்மணி வார்சடையோ
னருந்திய நஞ்சமு தாக்கிய வம்பிகை யம்புயமேற்
றிருந்திய சுந்தரி யந்தரி பாதமென் சென்னியதே.

நின்று மிருந்துங் கிடந்து நடந்து நினைப்பதுன்னை
யென்றும் வணங்குவ துன்மலர்த் தாளெழு தாமறையி
னொன்று மரும்பொரு ளேயரு ளேயுமை யேயிமயத்
தன்றும் பிறந்தவ ளேயழி யாமுத்தி யானந்தமே.

- அபிராமி அந்தாதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கற்புறு சிந்தை மாதர்

திருப்பதி இளம்பிறையாளன் அவர்கள்

பல மொழிகளிலும் எழுந்த இலக்கணங்கள் ஆண் பெண் பால் பற்றிப் பேசியுள்ளன. மனித இயலில் மட்டுமல்ல, வெவ்வேறு உயிர் இனங்களிலும் ஆண் பெண் பாவனையுண்டேனும் பறவை, விலங்கு மட்டுமன்றி தாவரங்களிலும் இப்பகுப்பு உண்டு. உதாரணம் ஆண்பனை, பெண்பனை இணைவிழைச்சு என்னும் பாலியற் தொடர்பின் ஆண் பெண் உறவே பரம்பரையை, சந்ததியை உருவாக்குகின்றன. இதில் மனித இனத்துக்கே ஒரு கட்டுப்பாடுண்டு. அதுவே நிறையெனப்படும் கட்டுப்பாடு. இந்த நிறை ஆண் பெண் இருவர்க்கும் பொதுவானதைக் கற்பு என்றும் நிதானப்படுத்தப்பட்டுள்ளது. அறிவு நிறை ஓர்ப்பு கடைப்பிடி ஆணினத்தின் ஒழுகலாறு. பெண்களின் நிறை அழிந்தால், கற்பு மாசுற்றால் ஒழுக்கம் தவறினதாகக் கருதப்பட்டது நிறை (திருக்குறள் 57) நெஞ்சைக் கற்பு நெறியில் நிறுத்தல் எனப் பரிமேலழகர் பொருள் கண்டுள்ளார். மரியாதை பேணகற்பு நெறிகட்டாயப்படுத்தப்பட்டது. ஒருவனுக்கு ஒருத்தியென்பதே நம் நாட்டு மரபு, வழக்கம், ஒழுக்கம் கெடின் பண்பு இழிந்தநிலை-ஒருவனைப்பற்றி ஒரகத்திருப்பதே கற்பு. கற்பு நிலைபெற மனஉறுதி முக்கியம். இந்தக்கற்பு ஆணுக்கும் பெண்ணுக்கும் பொது என்று பேசியவர் புரட்சிக் கவிஞர் பாரதியார். கற்பு பேணப்பட வேண்டும். காவல் தானேபாவையர்க்குகழகு இந்தக் கற்பு பேணப்பட்ட பெண்களைப் பத்தினியென்று அழைக்கப்படுகின்றனர். சீதாபிராட்டி கற்புக்கனலியாகப் பேசப்பட்டாள். கண்ணகியும் கற்புக்கடம் பூண்ட பத்தினிப் பெண்ணாகவே காட்டப்படுகின்றாள். கண்ணகி, சீதை, மண்டோதரி, பதுமகோமளை, நளாயினி, அருந்ததி போன்றோர் கற்பின் செல்விகளாகப் பாடப்பட்டிருக்கிறார்கள். பாரதியும் பத்தினியென்ற பிரயோகத்தை எடுத்தாண்டுள்ளார்.

காணிநிலம் வேண்டும் - பராசக்தி
காணிநிலம் வேண்டும் - அங்கு
தூணில் அழகியதாய் - நன்மாடங்கள்
துய்ய நிறத்தினதாய் - அந்தக்
காணிநிலத்திடையே ஓர் - மாளிகை
கட்டித்தர வேண்டும் - அங்கு
கேணி யருகினிலே - தென்னைமரம்
கீற்று மிள நீரும்

பத்துப்பன்னிரண்டு - தென்னைமரம்
பக்கத்தி லேவேணும் - நல்ல
முத்துச் சுடர்போலே - நிலாவொளி
முன்பு வரவேணும் - அங்கு
கத்துங் குயிலோசை - சற்றே வந்து
காதிற் படவேணும் - என்றன்
சித்தம் மகிழ்ந்திடவே - நன்றாயிளந்
தென்றல் வரவேணும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாட்டுக் கலந்திடவே - அங்கேயொரு
பத்தினிப் பெண்வேணும் - எங்கள்
கூட்டுக் களியினிலே - கவிதைகள்
கொண்டு தரவேணும்.

தோத்திரப் பாடல்கள்-12 காணிநிலம்

பத்தினியென்ற பெயரை முன்னோர் தம் பெண்பிள்ளைகளுக்குச் சூட்டினார்கள். ஈழத்திரு மண்ணில் பௌத்த மக்கள் வழிபட கண்டிமா நகரிலே கண்ணகிக்குப் பெருங்கோயில் ஒன்றுண்டு. அதைப் பத்தினித் தெவியோ எனப் பௌத்தர்கள் அழைக்கிறார்கள் கற்பினுக்கு அணியாயுள்ளவர்களைத் தர்மபத்தினியென்று போற்றினர்.

இதை விடுத்து வரைவின் மகளிர் பொது மகளிர் தேவதாசிகள் வழக்கம் தென்னக இலக்கியங்களிலே வலம்வரக் காணலாம். காமக்கிழத்தி, காதற்கிழத்தி அகத்துறை இலக்கியங்களிலே இடம்பெறக் காணலாம். தன் இல்லாளை விடுத்து வெளியே சென்று பரத்தமையுடன் உறவாடி வந்த கணவனைப் பார்த்து வினாவுகின்றாள் ஒரு கற்புடைமாது.

வேண்டிய போதின்பம் விளைக்கும் மடந்தையரைத்
தீண்டிய கையாலென்னைத் தீண்டாதே - பாண்டியா
முல்லைக் கதிபா முகம்பார்த் தகல நின்று
சொல்லக் கடவதெல்லாஞ் சொல்

பழம்பாடல்

நம் பூமி பெண்மையையும் பெண்ணொழுக்கத்தையும் மாசுறாமல் பேணியது. இன்றைய பாலியல் வன்முறை உலகளாவிய நெறியிற் பெண்களுக்கு ஏற்பட்ட சவால் எனலாம். ஐம்பெருங்குரவரில் தமையன் மனைவி, தாய் இடம் பெற்றுள் ளனர் தாய்க்குலத்தில் அதிமதிப்புக்குரிய தாயரை விவேசிந்தாமணி நிரற்படுத்திக் காட்டுகின்றது.

தன்னை யளித்தா டமையன் மனைகுருவின்
பன்னி யரசன் பயிறேவி - தன் மனையைப்
பெற்றா ளிவரையே பேசி லெவருக்கும்
நற்றாய ரென்றே நவில்.

விவேக சிந்தாமணி 116

(மனமே) பேசில்- (நீ மனிதன் ஒருவனுக்குரிய தாய்மாரைப் பற்றி ஆராய்ந்து) சொன்னால் தன்னை அளித்தாள் - தன்னைப் பெற்றவளும்; தமையன் மனை-தமையனுடைய மனைவியும், குருவின் பன்னி-ஆசிரியரின் மனைவியும், அரசன் பயில்-மன்னவன் பழகி விரும்புகின்ற, தேவி-பெண்சாதியும், தன் மனையை-தன் மனைவியை, பெற்றாள். ஈன்றவளையும், (ஆகிய) இவரையே - இவர்களையே, நற்தாயர் என்று-நல்ல தாய்மார்கள் என்று, எவருக்கும் எத்தகைமையினருக்கும், நவில் கூறுவாயாக.

பெண்ணிற் பெருந்தக்கயாவுள எனப்பாடிய குறளாசான் அதன் முத்திரையான கற்பையும் உடன் சொன்னார். இந்தத் திண்மையை வைத்துத் தாயுமான சுவாமிகள் ஒருதத்துவத்தையே விளக்குகின்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கற்புறு சிந்தை மாதர்
　　　　கணவரை அன்றி வேறோர்
இல்புறத் தவரை நாடார்
　　　　யாங்களும் இன்ப வாழ்வும்
தன்பொறி ஆக நல்கும்
　　　　தலைவநின் அல்லது; ஓர் தெய்வம்
பொற்புஉறக் கருதோம் கண்டாய்;
　　　　பூரணா னந்த வாழ்வே.

தாயுமான சுவாமிகள் - 36 கற்புறுசிந்தை!

தன்பொறிஆக-தன் செல்வமாக, பொற்புஉற-பொலிவு அடைதற் பொருட்டு.

இப்பாடலின் பொருள்:

கற்பு-கற்பானது, உறு-மிகுந்த, சிந்தை-மனத்தினை உடைய, மாதர்-பெண்கள், கணவரை-தம் சொந்தக் கணவனை, அன்றி-அல்லாமல், வேறு-அந்நியமாகிய, ஓர்-ஒரு,இல்புறத்தாரை-அயல்வீட்டு ஆடவரை, நாடார்-விரும்ப மாட்டார்கள், அஃதேபோல, யாங்களும்-நாங்களும், இன்ப வாழ்வு-சுகவாழ்க்கையையும், தன்பொறிஆக-தன் செல்வமாக, நல்கும்-தந்தருளுகின்ற, தலைவ!-முதல்வனே!, நின் அலது-உன்னை அன்றி, ஓர் தெய்வம் மற்றொரு தெய்வத்தை, பொற்புஉற- பொலிவு அடைதற் பொருட்டு, கருதோம்-நாடோம், விரும்போம், பூரண ஆனந்த வாழ்வே பரிபூரணானந்தமே இன்ப வாழ்வை உடையவனே.

இதே பொருளமைவிலே திருநாலாயிரத்தில் ஒருபாசுரம் அமைந்துள்ளது. இப்பாசுரத்தை அருளிப் போந்தவர் குலசேகரப் பெருமாள்.

கண்டா ரிகழ்வனவே
　　　　காதலன்றான் செய்திடினும்
கொண்டானை யல்லா
　　　　லறியாக் குலமகள் போல்,
விண்டோய் மதிள்புடை சூழ்
　　　　விற்றுவக்கோட் டம்மா, நீ
கொண்டா ளாயாகிலுமுன்
　　　　குரைகழலே கூறுவனே　　　　　பெருமாள் திருமொழி. 5:2

வைணவ திவ்விய தேசங்களிலே ஒன்று திருவித்துவக் கோடு. இதை விற்றுவக்கோடு-திருவிச்சிக் கோடு, திருவிஞ்சிக் கோடு என்றும் அழைப்பர். இங்கே சிவ சந்நிதியும் உண்டு. பஞ்சபாண்டவர்கள் சேவித்த தலம் இது. வைணவர்கள் மறந்தும் பிறன் தொழாதவர்கள். வைணவரொருவர் துன்பப்பட்டால் தம் துயரமாகக் கொள்பவர்கள். அந்தப் பக்தியனுபவங்களைப் பல பாசுரங்களிலே வடித்த குலசேகரப் பெருமாளும் தாயுமானவர் நோக்கில் இப் பாசுரம் தந்துள்ளார். "தற்காத்துத் தற்கொண்டாற் பேணி தகை சார்ந்த சொற் காத்துச் சோர்விலாள் பெண்" என்ற அய்யன் வள்ளுவன் நோக்கிற்கமைந்த ஒரு விஷ்ணு பக்தை தன் கணவன் எவ்வளவு தான் தப்பும், தண்டாவும் செய்தாலும் எவ்வளவு பழிச்சொற்களை உடையவனாய் இருந்தாலும், உலகத் தால் ஏழனஞ் செய்யப்பட்டாலும், தன்னை மனைவியாகக் கொண்ட கணவனை மட்டும் தன் கருத்திலே வரித்துக் கொள்வாள். ஒருகற்புள்ள பெண் கணவனிற் குறைபாடுகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பழிச்சொற்கள் இருப்பினும் அவனையே போற்றுவது போல, நானும் வித்துவக் கோட்டில் இருக்கும் பெருமாளே. நின்னையன்றி வேறு யாரையும் வேண்டேன் என்கிறார். நீ என்னை ஆட்கொள்ளாவிட்டாலும் நான் உன்னை விடமாட்டேன் என்கிற குலகேசரரின் திருவாக்கையும் தாயுமானவர் திருவாக்கையும் ஒப்பீடு செய்யின் கருதுகோள் ஒன்றாகவேயமைகிறது.

நால்வர் நாவிலும் சிவனே பாடப்பட்டுள்ளார். சிவனையே முழுமுதற் தெய்வமாய்க் கொண்டது சைவம். சைவம் சிவசம்பந்தமானது. சிவசம்பந்த முடையவர்கள் சைவசமயிகள். புறதெய்வ வழிபாட்டை அவர்கள் ஏற்றுக் கொள்வதில்லை. அதே போன்று விஷ்ணுவை வழிபடுவோர் வைணவர். திருமாலோடு சம்பந்தம் உடையவர்கள் வைணவர். மறந்தும் பிறந்தொழாத மாண்பினர் திருவாசகத்தை முற்றோதும் சைவப் பெருங்குடி மக்கள் இன்று ஆயிரமாயிரந் தெய்வ வழிபாடுடையராய்க் காணப்படுகின்றார்கள். உள்ளேன் பிற தெய்வம் உன்னையல்லாதெங்கள். உத்தமனே (திருச்சதகம் 2)

**கற்றறியேன் கலைஞானம் கசிந்துருகேன் ஆயிடினும்**
**மற்றறியேன் பிற தெய்வம் வாக்கியலால் வார்கழல் வந்து**
**வற்றினுமாந் திருந்தேன் எம்பெருமானே அடியேற்குப்**
**பொற்றவிசு நாய்க்கிடுமாறு அன்றே நின்பேரருளே**

திருவாசகம் திருவேசறவு 5

சிவனோடு சம்பந்தமில்லாத இவர்களே புறச்சமயத்தவர் எனலாம்.

பெண்கள் தங்கள் கணவரை நாடாமல், தம் கணவருக்குச் சமமாக ஆவது, உயர்வாக ஆவது எண்ணி அந்நிய புருடரை நாடின் கற்பிழந்து நரகத்தை எய்துவர். அதுபோல, சைவசமயிகள் தம் முதல்வனாகிய சிவபெருமானை விரும்பாமல்-வணங்காமல் அந்நிய தேவர்களை நாடின் நெறிபிழற்ந்து துன்பத்தினை எய்துவர். இன்று தாய்க்குலமும் நெறிதவறிப் போகாமல் மெய்ந்நெறி நின்று வாழ்வோமாக.

**தெய்வம் சிவமே; சிவனருள் சமயம்**
**சைவம், சிவத்தொடு சம்பந்தம் என்றான் சிற்றம்பலநாடிகள்**
**புறச்சமய நெறி நின்றும், அகச்சமயம் புக்கும்**
**புகல் மிருதிவழி யுழன்றும், புகலும் ஆச்சிரம**
**அறத்துறைகள் அவையடைந்தும்**
**அருந்தவங்கள் புரிந்தும்**
**அருங்கலைகள் பல தெரிந்தும், ஆரணங்கள் படித்தும்**
**சிறப்புடைய புராணங்கள் உணர்ந்தும் வேதச்**
**சிரப்பொருளை மிகத் தெளிந்தும் சென்றால் சைவத்**
**திறத்தடைவர் இதில் சரியை கிரியா யோகம்**
**செலுத்தியபின் ஞானத்தால் சிவனடியைச் சேர்வர்.**

சைவநீதியை இந்து நீதியென மாற்றுகிறார்கள் தென்னாடுடைய சிவனே போற்றி எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றியென்ற மகாமந்திரத்தை தென்னாடுடைய தேவி போற்றி எந்நாட்டவர்க்கும் இறைவீ போற்றியென மாற்றிப் படிக்கிறார்கள். நாம் கற்புடைய பெண்களாக வாழ்வோமாக.

**மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகம் எல்லாம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# நல்லூர் கந்தன் ஆலயம்



"நல்லூரான் திருவடியை
நான் நினைத்த மாத்திரத்தில்
எல்லாம் மறப்பேனடி – கிளியே
இரவு பகல் காணேனடி" (நல்லூரான்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

நாயகி நான்முகி நாரா யணிகை நளினபஞ்ச
சாயகி சாம்பவி சங்கரி சாமளை சாதிநச்சு
வாயகி மாலினி வராகி சூலினி மாதங்கிஎன்
றாயகி யாதி உடையாள் சரணம் அரண்நமக்கே

(அபிராமி அந்தாதி)



துர்க்கா புஷ்கரணியில் அம்பாள் தீர்த்தமாடும் காட்சி

அட்டைப்பதிப்பு: அனுஷ் பிரின்டர்ஸ் கொழும்பு-11.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org